நவம்பர் 2005

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



குஷ்பு-தங்கர் விவகாரம்:
பெண்ணியவாதிகளும்
பழமைவாதிகளும்



# எங்கெங்கும் போலீசு அதிகாரம்

படிப்பகம்

www.padippakam.com

# புத்ததேவ் பட்டாச்சார்யா:
# போராடும் தொழிலாளர்களின் முதுகில் குத்தும் 'தோழர்!'

"வீரன் போராடுகிறான்; கோழை சரணடைகிறான், துரோகி காட்டிக் கொடுக்கிறான்" என்று நறுக்குத் தெறித்தாற்போல் கூறினார், செக். நாட்டு கம்யூனிச புரட்சியாளரான தியாகத் தோழர் ஜூலியஸ் ஃபூசிக்.


காட்டிக் கொடுக்கும் துரோகிகள் - கருங்காலிகள் ஏராளமானோரை வரலாறு கண்டிருக்கிறது; அவர்களது துரோகத்தனம் அம்பலமாகும்போது குப்பைத் தொட்டியில் வீசியெறிந்தும் இருக்கிறது. ஆனால், துரோகி என்று அம்பலமான பின்னரும் ஒருவர் 'தோழர்' என்று அவரது கட்சியினரால் சித்தரிக்கப்படுகிறார். அவர்தான் மே.வங்கத்தை ஆளும் போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா.

அவரது மகாத்மியங்கள் ஒன்றா, இரண்டா? அன்னிய முதலீடுகளைச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பதில் அவர் காட்டும் பணிவு என்ன! பன்னாட்டு முதலாளிகளிடம் அவர் காட்டும் குழைவு என்ன! தொழிலாளர்களின் முற்றுகை (கெரோ) போராட்டத்துக்குத் தடைவிதித்து அவர் காட்டிய 'வீரம்'தான் என்ன! எங்கள் கொள்கையைத் தலைகீழாக மாற்றி விட்டோம் என்று பகிரங்கமாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் அவரது துணிவுதான் என்ன! உலகமயமாக்கலுக்கு ஆதரவாக பக்கமேளம் வாசிக்கும் பாங்குதான் என்ன! இப்படி கே.பி.சுந்தராம்பாள் பாடியதைப் போல, புத்ததேவின் அருமை பெருமைகளை "என்ன, என்ன!" என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அதற்குப் பக்கங்கள் போதாது. இருப்பினும் கடந்த செப்.29 அன்று நடந்த நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தின் போது, அவர் காட்டிய 'கடமையுணர்ச்சி'யைக் கண்டு மெய்சிலிர்த்து முதலாளித்துவப் பத்திரிகைகளே அதிசயித்து வாய் பிளந்து நிற்பதால், நாமும் நமது பங்குக்குச் சுருக்கமாக அதனைத் தொகுத்தளிப்பது அவசியமாகி விட்டது.

கடந்த செப்டம்பர் 29-ஆம் தேதியன்று சி.பி.எம். கட்சி தலைமை தாங்கும் சி.ஐ.டி.யு.வும் அதன் தோழமைச் சங்கங்களும், பொதுத்துறையைத் தனியார்மயமாக்கும் காங்கிரசு கூட்டணி அரசின் சூழ்ச்சிகளை எதிர்த்தும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தன. பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும், தொழிலாளி வர்க்கத்தின் பொதுக்கோரிக்கையை ஆதரித்து இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றன. போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தில் அரசு அலுவலகங்கள், வங்கி, பொதுத்துறை நிறுவனங்களும் பல தனியார் நிறுவனங்களும் மூடப்பட்டு, தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஊர்வலங்களும் ஆலைவாயிற் கூட்டங்களும் நடத்தினர்.

சி.ஐ.டி.யு.வுக்குத் தலைமை தாங்கும் சி.பி.எம். கட்சியின் தலைவர்களில் ஒருவரும், மே.வங்க முதல்வருமான புத்ததேவ் பட்டாச்சார்யா அன்று என்ன செய்தார் தெரியுமா? தொழிலாளர்களின் போராட்டத்தில் முன்னணியில் நின்று முழக்கமிட்டாரா? அல்லது தொழிலாளர்களுக்கு அரசியல் வகுப்புதான் நடத்திக் கொண்டிருந்தாரா? அப்படியெல்லாம் இல்லை. அன்று அவர் தொழிலாளர்களின் போராட்டத்துக்குத் துரோகமிழைத்துவிட்டு, தலைமைச் செயலகத்துக்குச் சென்று 'கடமையுணர்வோடு' அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினார். தான் மட்டும் இப்படி துரோகமிழைப்பது போதாதென்று, எல்லா 'இடதுசாரி' அமைச்சர்களையும் கட்டாயம் வேலைக்கு வருமாறு உத்தரவும் போட்டார்.

புத்ததேவ் மட்டுமின்றி, தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் அவரது மனைவியான மீரா, பொது வேலை நிறுத்தம் நடந்த போது கடமையுணர்ச்சியோடு தனது காரில் அலுவலகத்துக்குச் சென்றார். வழியில் அவரது காரை வழிமறித்து நிறுத்திய சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களிடம், "அலுவலகத்துக்குச் சென்று உழைக்க நினைக்கும் எனது விருப்பத்துக்குத் தடையாக நிற்க யாருக்கும் உரிமையில்லை" என்று எச்சரித்துவிட்டுச் சென்றார்.




இந்த விசயம் முதல்வரின் காதுக்கு எட்டியதும், தலைமைச் செயலகத்துக்கு செல்லும் சாலையில் திரண்ட தொழிலாளர்கள் - ஊழியர்களைப் பார்த்து "வேலைக்குச் செல்வோரைத் தடுக்காதீர்கள்; கும்பலாக சாலையில் செல்லாதீர்கள்; ஒற்றை சாரியாக ஊர்வலமாகச் செல்லுங்கள். உங்களுக்குப் போராட உரிமையுண்டு. அந்த

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு*

தொகுதி: 21
இதழ் 1
நவம்பர் 2005

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

அட்டை ஓவியம்:
முகிலன்

*படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்*

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

# எங்கெங்கும் போலீசு அதிகாரம் - ஆதிக்கம்!

தமிழகத்தின் தலைநகரைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவது என்ற திட்டத்தின் கீழ், இரண்டாண்டுகளில், குடிசைப் பகுதிகளைக் காலி செய்து 20,000 குடும்பங்களை வேரோடு பிடுங்கிக் கொண்டு போய் 20 மைல்களுக்கு அப்பால் உள்ள துரைப்பாக்கத்தில் குப்பையாகக் கொட்டியது, தமிழக அரசு. அவர்களோடு, சுனாமியால் பாதிக்கப்பட்டவை என்ற பெயரில் கடற்கரைக் குடிசைகளை இடித்துவிட்டு, ஒரே நாளில் 2,000 குடும்பங்களையும் அங்கு கொண்டு குவித்தனர்.

அங்கு குடிதண்ணீர், மின்சாரம், பள்ளி, மருத்துவமனை, போக்குவரத்து, தொழில் என்று மக்கள் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைக்கான வசதி எதுவுமே கிடையாது. இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்பு ஒருநாள் பிழைப்புத் தேடி உழைப்பாளிகளும், படிப்புக்காக பிள்ளைகளும் கிழக்குக் கடற்கரை - பழைய மாமல்லபுரம் சாலைகளில் போக்குவரத்துக்கு வழியின்றி அலைமோதிய போது அவர்களை எதிர்கொண்டது போலீசு அதிகாரிகள்தாம். ''சமாதானம்'' பேசிக் கொண்டே, அதிரடி ''கமாண்டோ'' போலீசைக் குவித்து கொலைவெறித் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டு, சிறுவர்கள், பெண்கள் மண்டையைப் பிளந்து, இளைஞர்களைத் தாக்கி, பொய்வழக்குப் போட்டு சிறையிலடைத்தனர்.

✳ கடந்த ஆகஸ்டு மாதம் ஒருநாள், சென்னையின் தெற்கு புறநகர் பகுதிக் குடியிருப்புகளில் இருந்து, போலி கம்யூனிஸ்டு மற்றும் பிற சமூக நல அமைப்புகளின் தலைமையில் திரண்ட மக்கள், குடிதண்ணீர், சாக்கடை - கழிப்பறை போன்ற அடிப்படை வசதி கோரி ஆயிரக்கணக்கானோர் கோட்டை நோக்கிப் புறப்பட்டனர். முதலமைச்சர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து மனுக் கொடுத்து முறையிடுவதுதான் அவர்களின் நோக்கம். ஆனால், சென்னையின் தெற்கு நுழைவாயிலில் அவர்களை எதிர்கொண்டவர்கள், சென்னை மாநகர உயர் போலீசு அதிகாரிகள், குறிப்பாக உளவுப் பிரிவு போலீசு உயர் அதிகாரி சிவனாண்டி; கூடவே, கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசும், தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் வாகனம்; சாதாரண மற்றும் ஏ.கே 47 வகை இயந்திரத் துப்பாக்கிகள் ஏந்திய பலவகைப் போலீசுப் படை. சிவனாண்டி முதலிய அதிகாரிகள் ''சமாதானம்'' பேசிக் கொண்டிருந்த போதே, போலீசு உளவாளிகளின் ஆத்திரமூட்டும் சதிச் செயல்களைத் தொடர்ந்து சென்னை அடையாறு பகுதியே அதிரடிப்படைத் தாக்குதலால் இரத்தக் காடாகியது. அடிப்படை வசதி கோரிய மக்கள் அடித்து நொறுக்கித் தூக்கியெறியப்பட்டனர்.

✳ இந்த செப்டம்பர் மாதம் முதல் வாரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பாசனக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடக் கோரி, சி.பி.எம். கட்சியின் விவசாய சங்கத்தினர், அக்கட்சி எம்.எல்.ஏ. ராமச்சந்திரன் தலைமையில் பேரணியாகப் புறப்பட்டுப் போய் அதிகாரியிடம் மனுக் கொடுப்பதற்கு விழைந்தனர். அதற்கு அனுமதி மறுத்த மாவட்ட உயர் போலீசு அதிகாரிகள், ''தேசிய நெடுஞ்சாலையில் கும்பலாக நடந்து போனார்கள்'' என்று குற்றஞ்சாட்டி, நூற்றுக்கணக்கான விவசாயிகளைக் கைது செய்தனர்.

✳ கோவையில் மூடிக் கிடக்கும் ஆலைகளைத் திறக்கக் கோரி சமீபத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய தொழிலாளர்கள் மீது கொடூரமான தடியடி நடத்தி, விரட்டியடித்தது போலீசு. பள்ளி - கல்லூரிக் கட்டண உயர்வை எதிர்த்து, சென்னையில் கல்வி இயக்குநரிடம் மனுக் கொடுப்பதற்குத் திரண்ட மாணவ-மாணவிகளைப் பிடித்துக் கொண்டு போய், போலீசு நிலையத்தில் வைத்துச் சித்திரவதை செய்துள்ளது, போலீசு.

✳''தண்ணீரைத் தனியார்மயமாக்காதே! வியாபாரமாக்காதே! தாமிரவருணியை உறிஞ்ச வரும் அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!'' ஆகிய முழக்கங்களை முன்வைத்து, கடந்த செப்.12 அன்று, பேரணி, ஆர்ப்பாட்டம், மறியல் நடத்துவதற்காக பாளையங்கோட்டை வ.உ.சி. திடலுக்கு வந்து இறங்கினர் புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்பினர். அவர்களை வரவேற்றது, இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் ஆயுதமேந்திய ஆண்-பெண் அதிரடி கமாண்டோ போலீசு படை, ரிசர்வ் போலீசு பட்டாளம், மற்றும் உள்ளூர் போலீசுடன் மாவட்ட, மண்டல உயர் போலீசு அதிகாரிகளின் கூட்டம். கையில் செங்கொடிகளையும், நெஞ்சில் உறுதியும் மட்டுமே ஏந்தியிருந்த போராட்டக்காரர்களை எதிர்கொள்வதற்கு எதற்கு இவ்வளவு நவீன ஆயுதமேந்திய படை என்று பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



இவையெல்லாம் வெறும் செய்தித் தொகுப்பு அல்ல. எங்கும் எதிலும் போலீசு அதிகாரிகளின் தலையீட்டைக் குறிக்கின்றன. அதாவது, இந்த நாட்டு ஆட்சி முறை, அனைத்துத் துறைகளிலும் போலீசின் அதிகாரத்தை நிலைநாட்டுவதாக மாறி வருகிறது.

இந்த நாட்டு ஆட்சி நிர்வாகம் அதிகாரபூர்வமாகவும், சட்டபூர்வமாகவும், நிர்வாகபூர்வமாகவும் எப்படி ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது? தொழில், விவசாயம், சட்டம் - ஒழுங்கு, நீதி-சிறை, கல்வி, மருத்துவம், பொதுமராமத்து, சமூக நலன், தொழிலாளர் நலன், கூட்டுறவு, உணவுப் பொருள் விநியோகம், வருவாய் - வரி, விளையாட்டு, கால்நடை, கைத்தறி, செய்தித் தொடர்பு - இப்படிப் பல பத்துத் துறைகளாக நிர்வாகம் பிரிக்கப்பட்டுள்ளது. தலைநகர் முதல் கிராமப் பஞ்சாயத்து வரை ஒன்றின் கீழ் ஒன்றாக பல அடுக்குகளில் நிர்வாகப் பொறுப்பாளர்கள் உள்ளனர். இலட்சக்கணக்கான அதிகாரிகளும், அலுவலர்களும், ஊழியர்களும் அந்தந்தத் துறைப் பணிகளைச் செய்திட வேண்டும். அந்தந்தத் துறைசார்ந்த அமைச்சகப் பொறுப்பு அதிகாரிகளும், அமைச்சர்களும் கூட உண்டு.



அடிப்படை வசதி கோரி மனு கொடுக்கப் போனபொழுது, சென்னை - அடையாறில் போலீசாரால் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்ட பொது மக்கள் (மேல்படம்); சென்னை - துரைப்பாக்கத்தில், அடிப்படை வசதி கோரியதற்காக போலீசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்படும் இளைஞர்.

ஆனால் நடப்பது என்ன? பள்ளி - கல்லூரிக் கட்டண உயர்வை எதிர்த்து மாணவ - மாணவிகள் போராடினால் கல்வித்துறை அதிகாரிகளோ, அமைச்சரோ வருவதில்லை. மூடிய ஆலைகளைத் திறக்கக் கோரித் தொழிலாளர்கள் போராடினால் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளோ, அமைச்சரோ வருவதில்லை. நீர்ப்பாசன வசதிகோரி விவசாயிகள் போராடினால் பொதுப்பணித் துறை அதிகாரிகளோ, ஆட்சியரோ, அமைச்சரோ வருவதில்லை.

இவ்வாறு பிரச்சினை - கோரிக்கை எதுவானாலும் சம்பந்தமே இல்லாத போலீசு அதிகாரிகள், தாக்குவதற்கான எல்லா ஏற்பாடுகளுடனும் முழு ஆயுத பாணியாக வந்து, நிராயுதபாணியான மக்களைச் சந்தித்து ''சமாதானம்'' பேசுகிறார்கள். எதற்கு? கலைந்து போய் விடுங்கள்; பிரச்சினை பிறகு தீர்க்கப்படும்; இல்லையேல் விரட்டியடிப்போம் என்று மிரட்டுவதற்கு! கூடவே, ஓரிரு கீழ்நிலை அலுவலர்கள் வருகிறார்கள். ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அமைச்சர்களும் குளுகுளு அறையில் நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

கும்பல் கூடினால் சட்டம் - ஒழுங்கு பாதிக்கப்படும்; அதைச் சமாளிக்கவே போலீசு வருகிறது என்று நியாயப்படுத்தப்படுகிறது. கும்பல் கூடுவதும், போராடுவதும் ஏன் அவசியமாகிறது? ஏற்கெனவே மனுப் போட்டு, மன்றாடிச் சலித்துப் போகும் நிலையில் தான் மக்கள் தெருவில் இறங்குகிறார்கள். வசதியானவன் எவனும் போராடக் கிளம்புவதில்லை. அன்றாடப் பிழைப்பை நம்பி வாழும் மக்கள் வேறு வழியில்லாத நிலையில்தான் போராடத் துணிகிறார்கள்.

அவர்கள் எழுப்பும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத — அவர்களை எதிர்கொள்ளும் திராணியற்ற நிலையில், அவர்களைச் ''சமாளிக்கும்'' பொறுப்பை போலீசிடம் ஒப்படைத்து விடுகிறார்கள் பொறுப்பேற்க வேண்டிய அதிகாரிகளும் ஆட்சியாளர்களும். பகுதி வாழ் மக்கள் எந்தப் பிரச்சினையானாலும் போலீசை அணுகும்படி ''போர்டு'' போட்டு தெருவுக்குத் தெரு சாவடிகளும் கட்டியுள்ளனர். தங்களை அறியாமலோ, தங்களிடம் நேரடியாகவோ எந்தவொரு பிரச்சினையும் தோன்றிவிடக் கூடாது என்று மக்களைக் கண்காணிப்பதற்காகவே இந்தச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் மத்தியிலே இருந்து, தகவல் சொல்வதற்கு என்றே ''சிறுவர் குழு'', ''போலீசின் நண்பர்கள்'' என்ற


படிப்பகம்

பெயரில் உளவாளி களையும் தயார் செய்து வைத்திருக்கிறார்கள்.

சரியாகச் சொல்வதானால், "ஆக்டோபஸ்" போல தன் கணக்கற்ற கரங்களையும் நீட்டி, சிவில் சமூகமே போலீசின் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படுகிறது. அரசின் ஒரே பணி சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு; அதாவது, போலீசு வேலை என்றாக்கப்படுகிறது. அரசின் எல்லாத் துறைகளிலும் தனியார்மயம், ஆட்குறைப்பு, சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதே சமயம், போலீசுத்துறை மட்டும் விரிவாக்கப்பட்டுக் கொண்டே போகிறது.



கல்விக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் எனக் கோரி மனு கொடுக்கப் போன இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் மீது பாய்ந்து குதறும் போலீசார்.

மருத்துவர், ஆசிரியர் உட்பட பல அவசிய வேலைகளுக்கு ஆளெடுப்பதையும் நிதி ஒதுக்குவதையும் அரசு பல ஆண்டுகளாக நிறுத்தி வைத்திருக்கிறது. ஆனால், போலீசு, கமாண்டோ அதிரடிப்படை போன்றவைகளுக்கு ஆளெடுத்துக் கொண்டே போகிறது. கார்கள், கணினிகள், குடியிருப்புகள், "ரேசன்" பொருட்கள், ஊக்கத்தொகை - ஊதிய உயர்வுகள், வழங்குவதோடு, கணக்கில் வராத நிதியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மற்ற அரசுப் பணிகளுக்கு ஆளெடுக்கத் தடை இருக்கும் பொழுது, போலீசு வேலைக்கு ஆளெடுக்க நடத்தப்படும் போட்டித் தேர்வு.



ஜெயலலிதா, நிர்வாக சூரப்புலி என்ற பெயரெடுத்த கருணாநிதி — இருவருமே போலீசை நம்பித்தான் அரசு நிர்வாகத்தை நடத்துகின்றனர். போட்டி போட்டுக் கொண்டு போலீசுக்கு சலுகைகளை வாரி இறைக்கின்றனர். அரசு நிர்வாகம் மட்டுமல்ல, சொந்தக் கட்சியினரையும், மாற்றுக் கட்சியினரையும் உளவு பார்ப்பதும் பழி வாங்குவதும் கூட போலீசை வைத்தே செய்கின்றனர். "தேசியக் கட்சிகளின் அறிவு ஜீவிகளோ", அரசியல் தலையீடின்றி அதிகாரிகளும், போலீசும் நிர்வாகத்தைக் கவனித்தால், எல்லாம் சரியாக நடக்கும் என்று புலம்புகிறார்கள்.

ஆனால், போலீசு இதற்கெல்லாம் தகுதியானதுதானா? கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும், கொலை, கொள்ளை, வழிப்பறி, மோசடி, ஆள் மாறாட்டம் என்று 17 கிரிமினல் குற்றங்கள் புரிந்ததாக போலீசார் மீது வழக்குகள் பதிவாகியுள்ளன. "வேலியே பயிரை மேய்கிறதே" என்று முதலாளிய அரசியல் பார்வையாளர்கள் புலம்புகின்றனர். மாநில டி.ஜி.பி., ஐ.ஜி., டி.ஐ.ஜி. சென்னை மாநகர ஆணையர், மாவட்ட எஸ்.பி., டி.எஸ்.பி. முதல் சாதாரண போலீசுக்காரர்கள் வரை குற்றவாளிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். போலீசு தேர்வு வினாத்தாள்களே வெளியிட்டு விற்கப்படுகின்றன.

சட்டவிரோதக் கைது, சித்திரவதைகள், போலீசுடன் மோதல் என்ற பெயரில் கொலைகள் ("என்கவுண்டர்") ஆகியவை வழக்கமான விகிதத்தில் பெருகிவரும் அதேசமயம், உயர் நீதிமன்ற உத்தரவுகளை மதியாது குற்றங்கள் புரிவது சமீப காலங்களில் அதிகரித்து விட்டது. மதம் பிடிக்கும் யானை அதன் பாகனையே தூக்கிப் போட்டு மிதித்துக் கொல்வதுண்டு. அதைப்போன்று, அதிகார வெறி பிடித்த போலீசு மிருகம் எந்த சமூகத்தின் பாதுகாப்புக்கு என்று உருவாக்கப்பட்டதோ அதையே தாக்கிச் சின்னாபின்னப்படுத்துவதாகி விட்டது.

•

www.padippakam.com

## குஷ்பு - தங்கர்பச்சான் விவகாரம்:

# பெண்ணியவாதிகளும் பழமைவாதிகளும்

"பெண்கள் திருமணமாகும் போது கன்னித்தன்மை கலையாமல் இருக்க வேண்டும்' என்பது போன்ற எண்ணங்களில் இருந்து நமது சமூகம் விடுதலையாக வேண்டும். கல்வி பெற்ற எந்த ஆண்மகனும் தான் திருமணம் செய்யப் பேகிறவள் கன்னித் தன்மையோடு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டான். ஆனால், திருமணத்திற்கு முன்பு செக்ஸ் வைத்துக் கொள்ளும் போது கர்ப்பமாகமலும், பால்வினை நோய்கள் வராமலும் பெண் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்'' எனத் திரைப்பட நடிகை குஷ்பு, இந்தியா-டுடே (தமிழ்) வார இதழில் சொல்லி வெளியான கருத்துகள், ''கற்பு'' மற்றும் பாலியல் ஒழுக்கம் தொடர்பாக வாத - பிரதிவாதங்களைத் தொடங்கி வைத்திருக்கிறது.

இந்தியா-டுடே வாசகர்களோடு முடிந்து போயிருக்க வேண்டிய இந்தக் கருத்தை, கருணாநிதி குடும்பத்தினரால் வெளியிடப்படும் தமிழ் முரசு இதழ், தனது வியாபார - அரசியல் நோக்கத்திற்காக, ''தமிழ்ப் பெண்கள் கற்பு இல்லாதவர்களா?'' எனும் தலைப்பில் பரபரப்பூட்டும் செய்தியாக மாற்றியது. இதையடுத்து, தினத்தந்தி (24.9.05) நாளிதழுக்கு பேட்டியளித்த குஷ்பு, ''திருமணத்திற்கு முன் செக்ஸ் வைத்துக் கொள்ளாத ஆண்-பெண் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என அதிமேதாவித்தனமாகக் கேட்டு வைத்தார். இதையடுத்து, பா.ம.கவும், விடுதலை சிறுத்தைகளும் தமிழ் பெண்களை குஷ்பு அவமானப்படுத்தி விட்டதாகக் குற்றஞ் சுமத்தி, அவருக்கு எதிராகத் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பதோடு, அவருக்கு எதிராக கிரிமினல் வழக்குகளும் தொடுத்துள்ளன.

இந்தியா-டுடே வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக் கணிப்பில், ''பெண்கள் மணமாகும்வரை கன்னியாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?'' என்ற கேள்விக்கு 66 சதவீதப் பெண்கள், 'ஆம்' என்று பதில் அளித்துள்ளனர். குறிப்பாக, சென்னையில் 82 சதவீதப் பெண்கள் திருமணமாகும்போது பெண்ணின் கன்னித்தன்மை கலையாமல் இருக்க வேண்டும் என்று கருத்து சொல்லியுள்ளார்கள். திருமணத்திற்கு முன்பு உடலுறவு வைத்துக் கொள்வதை 71 சதவீதப் பெண்கள் தவறு என்று குறிப்பிட்டுள்ளனர்.

மேட்டுக்குடி திமிரோடு குஷ்பு கேட்டிருக்கும் கேள்விக்கு, இந்தப் புள்ளிவிவரங்களே முகத்தில் அடித்தாற் போல பதில் சொல்லி விடுகின்றன. ஆனால், பா.ம.கவும், விடுதலைச் சிறுத்தைகளும் போராட்டம் நடத்துவதற்கு வேறு பிரச்சினையே இல்லை என்பது போல, 'நீதி' கேட்டு குஷ்புவுக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன.

•••

நகர்ப்புறத்தைச் சேர்ந்த படித்த, வேலைக்குப் போகும் பெண்கள் கூட, மோசமான, பொறுப்பில்லாத கணவனிடமிருந்து மணவிலக்கு பெறத் தயங்கும்போது, கிராமப்புறங்களில், பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட குடும்பங்களில் ''அறுத்துக் கட்டும் பண்பாடு'' ஆண்டாண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. கணவன் மோசமானவனாக, பெண் பித்தனாக இருந்தாலும், இந்த ஒழுங்கீனத்தைப் பொறுத்துக் கொண்டு, வாழ்நாள் முழுவதும் அவனுக்காகவே வாழ்வதுதான் ''கற்புடைமை'' என்ற பண்பாட்டிற்கு நேர் எதிரானது, இது. ''யாருடன் சேர்ந்து வாழ்வது?'' என்று தீர்மானிக்கும் உரிமையை ''கற்பு'' தட்டிப் பறித்து விடுகிறது. ஆனால், மணமான மறு நாளே அறுத்துக் கொண்டு, தனக்குப் பிடித்த வேறொருவனுடன் சேர்ந்து வாழும் 'கீழ் சாதிப் பெண்களை' கிராமப்புறங்களில் காண முடியும்.



குஷ்பு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கும்வரை போராட்டம் ஓயாது எனபேட்டியளிக்கும் திருமாவளவன் - இராமதாசு.

கறாராகச் சொன்னால், ''கற்பு'' சாதிகளைக் கடந்த தமிழ்ப் பண்பாடு அல்ல. சொத்துடைமை கொண்ட பார்ப்பன - வேளாள சாதிப் பண்பாடுதான் ''கற்பு''. இம்மேல்சாதி பண்பாட்டை, தொன்று தொட்ட தமிழர்களின் கலாச்சாரம் போல ஊதிப் பெருக்கியதில், இந்துத்துவாவாதிகள், திராவிடக் கட்சிகள், தமிழினவாதிகள், தமிழ் சினிமாக்களுக்கு முக்கிய பங்குண்டு. குறிப்பாக, ''கீழ் சாதிகள்''


படிப்பகம்

www.padippakam.com

''இந்து'' என்ற போர்வையில் எவ்வளவு தூரம் பார்ப்பனமயமாக்கப்படுகிறதோ, அதற்கு நேர் விகிதத்தில் ''கற்பு'' என்ற பண்பாடு அச்சாதிப் பெண்கள் மீது திணிக்கப்படுகிறது.

பெரியார், அம்பேத்கர் வழிநடப்பவர்கள் என சுயதம்பட்டம் அடித்துக் கொள்ளும் வன்னியரான இராமதாசிற்கும், தாழ்த்தப்பட்டவரான தொல்.திருமாவளவனுக்கும் இந்த உண்மை தெரியாதா? இந்த உண்மைக்கு நேர் எதிராக அவர்கள் கற்பை தொன்றுதொட்ட தமிழ் கலாச்சாரம், பண்பாடு போல கொண்டாடுவது வரலாற்று மோசடி. பார்ப்பன - வேளாளப் பண்பாடான கற்பிற்கு வக்காலத்து வாங்குவதன் மூலம், ''கீழ் சாதி'' பெண்கள் ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வந்த உரிமைகளை, அவர்கள் தட்டிப் பறிக்கின்றனர். மேலும், ''கீழ்ச்சாதி''களைப் பர்ப்பன பண்பாட்டில் மூழ்கடிக்கும் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் வேலையை இவர்கள் சுலபமாக்கி விடுகிறார்கள்.

•••

''கற்பு'', ''கன்னித்தன்மை'' போன்ற பழைய சமூக கட்டுப்பாடுகள் மதிப்பீடுகளுக்கு எதிராக, ''திருமணத்துக்கு முன்பே உறவு கொள்ளலாம்'', ''கணவன் தவிர்த்த வேறு ஆடவனுடன் உறவு கொள்ளலாம்'' என்பது போன்ற 'பாலியல் புரட்சி' கருத்துக்கள் (மேட்டுக்குடி) பெண்கள் மத்தியில் தோன்றுவதற்கு, தராளமயம்தான் மூல காரணமாக இருக்கிறது. இதனைப் பாலியல் மருத்துவர்கள் தொடங்கி பெண்ணியவாதிகள் உள்ளிட்டு அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இந்த தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவது, ப.சிதம்பரமும், மன்மோகன் சிங்கும் மட்டும்தானா? பா.ம.க.விற்கு இதில் கொஞ்சம்கூடப் பங்கு கிடையாதா? கிட்டத்தட்ட கடந்த ஏழு ஆண்டுகளாக மைய ஆட்சியில் பங்கு பெற்று வரும் பா.ம.க., ''தமிழ் பண்பாட்டிற்கு'' எதிராக இப்படிப்பட்ட சீரழிவுகளைத் தோற்றுவிக்கும் தாராளமயத்தைக் கண்டித்து ஒரு வார்த்தையாவது முணுமுணுத்திருக்குமா?

ஒருபுறம் மேட்டுக்குடி பெண்களிடம் ''பாலியல் புரட்சி'' கருத்துக்களைத் தோற்றுவிக்கும் தாராளமயம், இன்னொருபுறமோ அடித்தட்டு வர்க்கப் பெண்களின் ''கற்புக்கே'' உலை வைத்து விடுகிறது. தனியார்மயம் - தாராளமயம் விவசாயத்தையும், கைத்தொழிலையும், சிறு தொழில்களையும் அழித்துக் கொண்டே போவதால்,



நடிகை குஷ்புவுக்கு எதிராக சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டம்.

பிழைக்க வேறு வழியில்லாமல், அடித்தட்டு பெண்கள் விபச்சாரத்திற்குள் தள்ளப்படுவது தாராளமயத்தின் பின் அதிகரித்திருப்பதைப் பல்வேறு ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

பல்வேறு அழகு சாதனப் பொருட்களைச் சந்தையில் இறக்கிவிட்டு, பெண்களை அழகுப் பதுமைகளாக மாற்றும் போக்கும் தாராளமயத்தின் பின்தான் தீவிரமாக நடந்து வருகிறது. ஊருக்கு ஊர் அழகிப் போட்டிகள் நடப்பதும், அதில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சிறுமிகள் தொடங்கி மணமான பெண்கள் வரை கலந்து கொள்ளுவதையும் தாராளமயத்திற்கு முன் நாம் கேள்விப்பட்டதுண்டா?

எந்த தாராளமயம் தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்டு அடித்தட்டு மக்களின் வாழ்க்கைக்கும், பண்பாட்டிற்கும் உலை வைக்கிறதோ, அதே தாராளமயத்தை கெயில் ஓம்வட் போன்ற தலித் சிந்தனையாளர்கள், ''தாழ்த்தப்பட்ட மக்களை உய்விக்க வந்த வழியாக''க் கொண்டாடுகிறார்கள். தொல்.திருமாவளவனோ பா.ம.க. இராமதாசு மூலம் தி.மு.க். கூட்டணிக்குள் நுழைந்துவிட காத்துக் கொண்டிருக்கிறார். அவர், தி.மு.க. கூட்டணிக்கு நுழைந்து விட்டால், ''தமிழ் பண்பாட்டையும் தமிழச்சிகளின் கற்பையும்'' பாதுகாக்கும் கேடயமாகத் தாராளமயம் மாறி விடுமா?

எனவே, இவர்கள் ஒருபுறம் தாராளமயத்தை ஆதரித்துக் கொண்டு, மறுபுறம் '''கற்பு' என்ற தமிழ் பண்பாட்டிற்காக''ப் போராட்டம் நடத்துவது பித்தலாட்டத்தனமானது

•••

''செக்ஸ் பிரச்சினைகளை'' கிளுகிளுப்பூட்டும் கட்டுரைகளாக எழுதிவரும் நாரரயண ரெட்டி போன்ற மருத்துவர்கள் கூட, ''திருமணத்திற்கு முன் செக்ஸ் போன்ற பாலியல் சுதந்திரங்கள் தேவையில்லாத ரிஸ்க்; ஆபத்தான சங்கதி'' என்றே குறிப்பிடுகிறார்கள். ஆனாலும், இந்தியா-டுடே வகையறாக்கள், இப்பாலியல் சுதந்திரத்தை எதிர்க்கும் அனைவரையும் ஒரே தட்டில் வைத்து, ''பழமைவாதிகள், பத்தாம்பசலிகள், கலாச்சார காவலர்கள்'' எனச் சாடுகிறார்கள்.

இந்திய ஓட்டுக் கட்சிகளிலேயே படுபிற்போக்கான இந்து மதவெறி பாசிஸ்டுகளை ஆதரித்து எழுதி வரும் பத்திரிகையான இந்தியா-டுடே, இந்தப் பாலியல் சுதந்திரப் பிரச்சினையில், தன்னை கருத்து சுதந்தரத்தின் காவலனாகக் காட்டிக் கொள்கிறது. தாராளமயத்தின் பின், விபச்சாரம், பாலியல் சுற்றுலா சேவைத் தொழிலாக மாறிவிட்டதைப் போல, கருத்துக் கணிப்பு என்ற பெயரில் இந்தியா-டுடே வெளியிட்டுள்ள வக்கிரமான கேள்விகள் கூட கருத்துச் சுதந்திரம் ஆகிவிட்டன.

இந்தியா-டுடேயில் கருத்து சொன்ன குஷ்புவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் திருமாவளவன் - ராமதாசு கூட்டணி, அவரைவிட வக்கிரமான கேள்விகளைக் கேட்டுள்ள இந்தியா-டுடே பத்திரிகையை கண்டித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. நடிகர் சங்க கட்டிடத்திற்குள் துடைப்பத்தை வீசிய அக்கூட்டணி, இந்தியா-டுடே அலுவலகத்தின் மீது கை வைக்கத் துணியவில்லை.

அவர்கள் இந்தியா-டுடேயைக் கண்டு கொள்ளாமல் விட்டதற்கு, ஒரு நடிகையை எதிர்த்துப் போராட்டம் நடத்தினால் கிடைக்கும் மலிவான

விளம்பரம், இந்தியா-டுடேயை எதிர்த்து நடத்தினால் கிடைக்காது என்பது மட்டும் காரணம் அல்ல; அவர்களின் ஒட்டுச்சீட்டு அரசியலுக்கு இந்தியா-டுடே போன்ற பிரபலமான பத்திரிகைகளின் ஆதரவு தேவை என்பதால் தான் மௌனமாக இருக்கிறார்கள். இந்தியா-டுடேயை எதிர்த்துப் போராட்டம் நடத்தினால், அதில் விருந்தினர் பக்கம் எழுத மீண்டும் வாய்ப்பு கிடைக்காது என்பது கூட திருமாவளவனின் வாய்க்குப் பூட்டு பூட்டியிருக்கலாம்.

தாராளமயம் பெண்கள் மீது எத்தனையோ சுமைகளை ஏற்றி வைத்திருக்கிறது. பெண்களின் செக்ஸ் பிரச்சினை குறித்து வருடத்திற்கு இரண்டு, மூன்று இதழ்கள் கருத்துக் கணிப்பு வெளியிடும் இந்தியா-டுடே, பெண்கள் மீது தாராளமயம் திணித்துள்ள சுமைகளைப் பற்றி ஒரேயொரு கருத்து கணிப்பாவது நடத்தியிருக்குமா?

இந்தியா-டுடே, பெண்களின் செக்ஸ் பற்றி கிளுகிளுப்பூட்டும் படங்களோடு கருத்துக் கணிப்பு வெளியிடுவதற்கு காரணம், அதனின் வியாபார நோக்கம் மட்டும் அல்ல; வாழ்க்கையை விதவிதமாக அனுபவிக்கத் துடிக்கும் மேட்டுக்குடி வர்க்கத்தின் பாலியல் கலாச்சாரத்தை, நடுத்தர வர்க்கப் பெண்களையும் தாண்டி கீழே கொண்டு சென்றுவிட வேண்டும் என்ற இந்தியா-டுடேயின் வர்க்கப் பார்வைக்கும் முக்கிய பங்குண்டு.

திருமாவளவன் - ராமதாசு கூட்டணியைக் கண்டிக்கும் பலரும், ''குஷ்புவுக்கு கருத்துச் சொல்ல உரிமையில்லையா?'' எனக் கேள்வி எழுப்புகிறார்கள். குஷ்புவுக்கு கருத்துச் சொல்ல உரிமையில்லையா என்பதல்ல இங்கே பிரச்சினை. இப்படிக் கேள்வி எழுப்புவதன் மூலம் இந்த அறிவுஜீவிகள் பலரும் மையமான விசயத்திற்குள் நுழையாமல் நழுவிக் கொள்கிறார்கள். மாறாக, பாலியல் சுதந்திரம், பெண்ணுரிமை என்பது குறித்து இந்தியா-டுடேயும், குஷ்புவும் சொல்லியிருக்கும் கருத்துகள் சமூகத்திற்குப் பயனுள்ளதா என்பதுதான் மையமான கேள்வி.

தனிப்பட்ட ரீதியாகப் பார்த்தால் கூட, பாலியல் சுதந்திரம் போன்ற சமூகப் பிரச்சினைகளில் கருத்துக் கூறும் அளவிற்கு குஷ்புவிற்குத் தகுதியும், அனுபவமும் உண்டா? திரைப்படத் துறையில் பாலியல் ரீதியாகப் பெண்கள் சுரண்டப்படுவதை அம்பலப்படுத்தி ஒரு வார்த்தை இவர் பேசியதுண்டா? தனது சொந்தப் படத்தில் கூட நடிகைகளை அரைகுறை ஆடையுடன் நடனமாட விடும் ஒரு மேல்தட்டு காரியவாத நடிகையை, ஏதோ பெண்ணுரிமை போராளியை போல, இந்த அறிவுஜீவிகள் தமிழக மக்களின் முன் தூக்கிப் பிடிப்பது கேவலமானது.

## நரியைப் பரியாக்கும் திருமா.

சென்னை - மெரீனா கடற்கரையில் இருந்த கண்ணகி சிலை ஜெயாவின் சோதிட மூடநம்பிக்கைக்காக அகற்றப்பட்ட பொழுது, ''ஆண்களின் சொத்தாசைதான் கற்பு என்கிற கற்பிதத்தை உருவாக்கியது'' எனப் புரட்சிகரமாக வாய்ச்சவடால் அடித்த திருமாவளவன், இப்பொழுது, ''குஷ்பு இருப்பது கற்பைப் போற்றுகிற கண்ணகிகள் நடமாடும் தமிழ்நாட்டில் என்பதை மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்.'' (ஜூ.வி. 2.10.05) எனக் கற்பை ஏற்றிப் போற்றுகிறார். ''கற்பு என்பது மானுட சமூகத்தின் பொது ஒழுங்காக வரையறுக்கப்பட்டு முறைப்படுத்தப் பட்டுள்ளது'' என இந்தியா-டுடே (அக்.12, 2005) யில் முன்னுக்குப் பின் முரணாகப் பிதற்றுகிறார்.

திருமாவளவனுக்கு, முன்பு திருடர் பாதையாகத் தெரிந்த தேர்தல் பாதை, இப்பொழுது தலித்துகளைப் பாதுகாக்கும் ஜனநாயகப் பாதையாக மாறிவிட்டதைப் போல, ஆணாதிக்க கருத்தியலான கற்பும், தமிழ்ப் பண்பாடாக, பொது ஒழுங்காக மாறிவிட்டது. •

•••

பத்து - பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கூட, தனது பாலியல் தேவைகளை இவ்வளவு பச்சையாகப் பேசியிராத மேட்டுக்குடி வர்க்கமும், அவர்களது பத்திரிகைகளும், இப்பொழுது அதைப் பெண்ணுரிமையாக, புதிய சமூக ஒழுங்காகப் பிரகடனப்படுத்துவதற்குக் காரணம், தாராளமயம் புகுத்தியிருக்கும் நுகர்வு வெறி கலாச்சாரம்.

தினந்தோறும் புதிது புதிதாகக் கேட்கும் இந்த நுகர்வு வெறி, உணவு, உடை, நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றோடு மட்டும் நின்று விடுவதில்லை. பாலியல் உறவுகளிலும் தினுசுதினுசான வகைகளைக் கோருகிறது. அதுதான் வரைமுறையற்று பாலுறவு கொள்ளுதல் என்ற பழைய காட்டுமிராண்டி கால பாலுறவு பழக்கத்தை, நவீன பாலியல் சுதந்திரமாக — பாலியல் புரட்சியாக அறிமுகப்படுத்துகிறது.

குஷ்புவுக்கு ஆதரவாக துண்டறிக்கை வெளியிட்டுள்ள மாற்றுக் குரல்கள், ''கால் சென்டர், கணினி தொழில் நுட்பம் போன்ற வேலைகள் ஆடவர்களுடன் பழகும் வாய்ப்பை அதிகரிக்கிறது... இத்தகைய சூழ்நிலை பெண்களின் பாலியல் நிலைகளிலும், பாலியல் தேர்வுகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது'' எனக் குறிப்பிடுகிறது. இதற்குக் காரணம், இந்த நுகர்வு வெறிப் பண்பாடு தொழிலாளி வர்க்கத்தையும் விட்டு வைக்கவில்லை என்பதுதான்.

குறிப்பாக, தாராளமயத்தின் பின் வந்துள்ள கால் சென்டர் போன்ற தகவல் தொழில் நுட்ப (நவீன மூளை உழைப்பு) தொழிற்சாலைகளில், ஊழியர் சங்கங்கள் இருக்காது; மாறாக, இந்தத் தொழில்கள் மொத்தமாகக் குவிந்துள்ள தொழில் நுட்ப பூங்காங்களுக்குப் போனால், நுகர் பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனங்களின் ''ஷோ-ரூம்களை''ப் பார்க்கலாம்.

தகவல் - தொழில்நுட்ப நிறுவனங்களில் வேலைக்கு ஆளெடுப்பதே, அழகிப் போட்டி ஸ்டைலில் நடத்தப்படுகிறது. இதனால், அங்கு புதிது புதிதாக அழகிகளும், அழகன்களும் வந்து போன வண்ணம் இருக்கிறார்கள். வேலைப் பளுவில் ஏற்படும் மனச் சோர்வைக் குறைக்க, ''அவுட்டிங்'' என்ற மேல்தட்டு ''பார்ட்டி'' கலாச்சாரம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனால், மேல்தட்டு வர்க்கத்துக்கேயுரிய எல்லா பண்பாடுகளும், இவர்களிடம் தொற்றிக் கொள்கிறது. ஏற்கெனவே - மனதளவில் பணக்காரர்களைப் போலவே வாழ ஆசைப்படும் நடுத்தர வர்க்க இளைஞர்கள், எளிதாக இந்தக் கலாச்சாரத்தில் மூழ்கி விடுகின்றனர்.

இந்த நவீன மூளை தொழிற்சாலையில் உள்ள வேலைப்பளு காரணமாக, கணவன் - மனைவி இடையே பாலுறவில் பல சிக்கல்கள் தோன்றுவதாக மன நல மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். கணவன் - மனைவி இடையே உறவு சரியில்லாத பொழுது, சோரம் போவது எளிதாகி விடுகிறது. நகர்ப்புறத்தைச் சேர்ந்த படித்த, நடுத்தர வர்க்கத்து ஆண்-பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் துறையாக தக

www.padippakam.com

வல் - தொழில்நுட்பம் இருப்பதால், இந்தக் கலாச்சாரத்தை மனதளவில் முன்னரே ஏற்றுக் கொள்ளும்படி, அவர்களது பழைய பாலியல் கருத்துக்களை மாற்றியமைக்கும் வேலையை இந்தக் கருத்துக் கணிப்புகள் செய்து விடுகின்றன.

•••

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காதல் பிறக்க, அவர்கள் இருவர் இடையே ஏதோ ஒருவித ஈர்ப்பு இருந்தால் மட்டும் போதாது; இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையாய் இருப்போம் என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும். இந்த நம்பிக்கை குலைந்து போய்விட்டால், காதல் மரித்துப் போய், வாழ்க்கையே சவமாகி விடும்.

பாலியல் புரட்சியோ, ஆண்-பெண் இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையாய் இருக்கத் தேவையில்லை என்பதை முன்நிபந்தனையாகக் கொள்கிறது. எனவே, இந்த உறவில் காதல் இருக்காது. காதல் இல்லாத உறவு நெறியுடையதாகவும் இருக்காது.

பாலியல் மருத்துவர்கள் பாலுணர்வை வெறும் உடல்சார்ந்த விசயமாகப் பார்க்கவில்லை. மனத்தின் பல்வேறு உணர்ச்சி நிலைகளின் ஒரு வெளிப்பாடே பாலுணர்வு எனக் கூறுகிறார்கள். ஆனால், பாலியல் சுதந்திரமோ ஆண்-பெண் இடையேயான பாலுணர்வை வெறும் உடல் இச்சை சம்பந்தப்பட்ட விசயமாக குறுக்கி விடுகிறது. எனவே, இது அறிவியலுக்கே எதிரானதாகிறது. மேலும், காதல் போன்ற சமூக உறவுகள் இல்லாத காட்டுமிராண்டி காலத்தில், வெறும் பாலுணர்ச்சியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஆண்-பெண் இடையே உறவு இருந்த நிலைக்கு, நாகரிக மனித சமூகத்தை தாழ்த்தி விடுகிறது.

பெண்ணின் கன்னித்தன்மை என்பதே முட்டாள்தனமானது என மருத்துவ அறிவியல் சாடுகிறது. ஏனென்றால், பெண்ணின் ''கன்னித் திரை'' மிதிவண்டி ஓட்டுவது, நீந்துவது போன்ற நடவடிக்கைகளால் கூடக் கிழித்து போய் விடக் கூடியது. குஷ்பு இந்த அறிவியல் அர்த்தத்தில் கன்னித் தன்மையை எதிர்பார்க்கக் கூடாது எனச் சொல்லவில்லை.

ஒருவரை நம்பி ஏமாந்து போகும் பெண்களையும், பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆட்பட்ட பெண்களையும் கன்னித்தன்மை இல்லாதவர்களாகக் கூறும் சமூகம், அவர்களை மானம் இழந்தவர்களாக, திருமணத்திற்குத் தகுதியில்லா

# தங்கர்பச்சானின் ஆண்டைத்தனம்

இராமதாசும், திருமாவளவனும், ''குஷ்புவுக்கு ஒரு நீதி, தங்கர்பச்சானுக்கு ஒரு நீதியா?'' எனக் குமுறிக் கொண்டிருப்பதே, இப்போராட்டத்தின் பிற்போக்குத்தனத்தை மட்டுமல்ல, இவர்கள் நோக்கத்தையும் அம்பலப்படுத்திக் காட்டி விடுகிறது. ''பணத்துக்காக நடிக்கும் நடிகைகள் விபச்சாரிகள்'' என தங்கர்பச்சான் கேவலமாகப் பேசியதால் அவர் நடிகர் சங்கத்தால், குஷ்பு, மனோரமா ஆகிய நடிகைகளின் முன் மன்னிப்பு கேட்க வைக்கப்பட்டார்'' என்பது பிரச்சினையின் ஒரு பகுதிதான். இதனின் இன்னொரு பக்கத்தை சம்மந்தப்பட்ட இரண்டு தரப்புமே திட்டமிட்டே மூடி மறைத்து விட்டார்கள்.

தங்கர்பச்சான் சொந்தமாகத் தயாரித்த ''சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி'' திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்த நவ்யா நாயரின் ஒப்பனைக்காரப் பெண்ணுக்கு 600 ரூபாய் சம்பள பாக்கியைத் தராமல் தங்கர்பச்சான் இழுத்தடித்து வந்தார். படப்பிடிப்பு வேலைகள் முழுவதும் முடியப் போகும் நேரத்தில் கூட தங்கர்பச்சான் இந்த சம்பள பாக்கியைத் தராததால், நவ்யா நாயர் ஒப்பனைக்காரப் பெண்ணுக்கு சம்பள பாக்கியைக் கொடுத்தால் தான் நடிப்பேன் என நியாயமான முறையில் தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்.

இதனால் ஆத்திரம் அடைந்த தங்கர்பச்சான், ஒரு வார இதழுக்கு அளித்த பேட்டியில், ''பணத்துக்காக நடிக்கும் நடிகைகள் விபச்சாரிகள்'' எனத் திட்டித் தீர்த்தார். சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி பாடல் ஒலிநாடா வெளியீட்டு விழாவில், ''கோடி கோடியா ரூபாயைப் போடுறோம். கேவுலம், 600 ரூபாய்க்கா ஒரு மேக்கப் போடுற பொம்பளெ ஷூட்டிங்கை கேன்சல் பண்ண வச்சிடுச்சின்னா இந்தத் தமிழ் சினிமா எப்படி உருப்படும்?'' என இந்தத் தமிழ் படைப்பாளி தனது ஆணவத்தைக் கக்கியிருக்கிறார்.

வேலை செய்வதன் கூலி கேட்டால், அதைக் கொடுக்காமல் திமிராகப் பேசுவது ஆண்டைகளின் மனோபாவம். தங்கர்பச்சான் நடிகைகளை விபச்சாரி என்று கேவலப்படுத்தியதற்காக மட்டுமல்ல, அவரின் இந்த தொழிலாளர் விரோத ஆண்டை மனோபாவத்துகாகவும் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். தனது திரைப்படங்கள் அனைத்திலும் பெண்ணடிமைக் கருத்துக்களை விற்பனை செய்து வரும், இந்தப் பிற்போக்கு வியாபாரியைத் தமிழர்கள் புறக்கணித்திருக்க வேண்டும். ஆனால், பாட்டாளி மக்கள் பெயரில் கட்சி நடத்தும் இராமதாசும்; மார்க்ஸ் - அம்பேத்கர் என வாய்ச்சவடால் அடிக்கும் திருமாவளவனும், தங்கர்பச்சான் தமிழ் படைப்பாளி என்பதற்காகத் தண்டிக்கப்பட்டதாகப் பூசி மெழுகுகிறார்கள்.



நடிகர் சங்கக் கட்டிடத்திற்கு வந்து, நடிகைகள் முன்பு மன்னிப்பு கேட்கும் தங்கர்பச்சான். (நன்றி: நக்கீரன்)

இராமதாசும், திருமாவளவனும் தங்கர்பச்சானுக்காக வக்கீல்களாக மாறி வாதாடுவதற்கு, அவர் தமிழ் பாதுகாப்பு இயக்கத்திற்கு நெருக்கமானவர் என்பது மட்டுமல்ல; அவர் வன்னிய சாதியைச் சேர்ந்தவர் என்பதும் முக்கிய காரணம். இறுதியாகப் பார்த்தால், தமிழ் பாதுகாப்பு என்பது, இப்படிப்பட்ட பிற்போக்கு ஆண்டைகளைப் பாதுகாப்பதுதானா?

•

www.padippakam.com




**மணிப்பூர் மாநிலத்தில் நடந்து வரும் சுயநிர்ணய உரிமை போராட்டத்தை ஒடுக்கும் முகமாக, இந்திய இராணுவம் நடத்திவரும் பாலியல் வன்முறைகளை, போலி மோதல் கொலைகளை அம்பலப்படுத்தி நடந்த நிர்வாணப் போராட்டம்: பெண்ணியவாதிகளுள் எத்தனை பேர் இந்தப் போராட்டத்தை ஆதரித்துக் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள்?**

தவர்களாகச் சாடுகிறது. இந்தப் பிற்போக்குத்தனங்களை எதிர்த்து, அதன் அடிப்படையில் கன்னித்தன்மையை எதிர்பார்க்கக் கூடாது என குஷ்பு கூறவில்லை. மாறாக, திருமணத்திற்கு முன்பே பாலுறவு கொள்வது தவறில்லை என்ற அடிப்படையில் தான் கூறியிருக்கிறார்.

பாலுறவில் சுய கட்டுப்பாடுடன் இருப்பது அடிமைத்தனமாகாது என லெனின் குறிப்பிடுகிறார். இந்த சுய கட்டுப்பாடு பெரும்பாலான இளைஞர்களிடையே கலாச்சாரமாகவே காணப்படுகிறது. ஆனால், பெண்ணியவாதிகள் இந்த சுயகட்டுப்பாட்டை மீறுவதுதான் சுதந்திரம் என்கிறார்கள். சுய கட்டுப்பாட்டை மீறி திருமணத்திற்கு முன்பே பாலுறவு கொள்ளலாம்; கணவன் அல்லாத வேறு ஆண்களுடன் உறவு கொள்ளலாம் என்பவர்கள் திருமணத்தையே ஒதுக்கித் தள்ள வேண்டியதுதானே? ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் ஏன் வைக்க வேண்டும்?

•••

“திருமணத்திற்கு முன்பே பாலுறவு வைத்துக் கொள்ளலாம்; திருமணமான பெண்கள், வேறு ஆண்களுடன் உறவு வைத்துக் கொள்ளலாம்'' என்பதை பெண்ணியவாதிகள், ஆணாதிக்கத்தை எதிர்த்த பெண் விடுதலையின் அம்சங்களாகச் சுட்டிக் காட்டுகிறார்கள். இது, நடைமுறையில், பல பெண்களோடு உறவு கொள்ள அலையும் ஆண்களுக்கு, தனது பெண்டாட்டி, அம்மா, சகோதரிகளின் ''கற்பை''த் தவிர, மற்ற பெண்களின் ''கற்பை''யெல்லாம் துச்சமாக மதிக்கும் ஆண்களுக்கு, பழம் நழுவி பாலில் விழுந்த கதையாகக் கைகொடுக்கும்.

பெரும்பாலான தமிழ் பெண்கள் ''கட்டுப்பெட்டித்தனமாக'' வாழும் போதே, ஆண்கள் வழிதவறிப் போனதற்கு பெண்கள் தான் காரணம், அவர்கள் உடுத்தும் உடைதான் காரணம் எனப் பழிப்போடும் ஆணாதிக்கத் திமிருக்கு, இப்பாலியல் சுதந்திரம் பெண்களைச் சீண்டுவதற்கும், பெண்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுவதற்கும் ஏராளமான வாய்ப்புகளை அள்ளிக் கொடுப்பதில் முடியும்.

எதிர் எதிரான கருத்துக்களான ஆணாதிக்கமும், பெண் விடுதலையும் ஒன்றையொன்று அனுசரித்துக் கொண்டு சமாதான சகவாழ்வு முடியுமா? ஆண்கள், பல பெண்களோடு உறவு வைத்துக் கொள்ளலாம் எனும் பொழுது, பெண்களும் அப்படி இருக்கலாம் என்பது கேட்பதற்கு ''மிகுந்த புரட்சிகரமானதாக''த் தோன்றினாலும், இதற்கும் பெண் விடுதலைக்கும் ஒட்டும் கிடையாது; உறவும் கிடையாது; ஒரு சீரழிவு, இன்னொரு சீரழிவை நியாயப்படுத்தி விடாது.

''ஒருவனுக்கு ஒருத்தி'' என்ற நவீனக் குடும்பம், ஆணாதிக்கம் நிறைந்ததுதான். அவன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் உறவு வைத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடியதுதான். இதைக் காட்டி குடும்பத்தையும், திருமணத்தையும் மறுக்கும் அராஜகவாதத்திற்குப் பதில் குடும்பம் மற்றும் ஆண் - பெண் உறவுகளை ஜனநாயகப்படுத்துவதற்குப் போராட பெண்களைத் தூண்டிவிடுவதுதான் மாற்றுத் தீர்வாக அமைய முடியும். பெண்கள் இப்படிப்பட்ட போராட்டங்களை தமது அன்றாட வாழ்க்கையில் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நடைமுறை வாழ்க்கையில், கணவன் வேறொரு பெண்ணுடன் உறவு கொண்டிருப்பது தெரிய வரும் பொழுது, பெரும்பாலான பெண்கள் பஞ்சாயத்துப் பேசியோ, போலீசு நிலையத்தில் கணவன் மீது புகார் கொடுத்தோ தான் பிரச்சினையைத் தீர்க்கப் போராடுகிறார்களேயொழிய, வீம்புக்காக வேறொரு ஆணுடன் தொடர்பு வைத்துக் கொள்வது கிடையாது. கணவனின் கள்ள உறவு காரணமாகவோ, பாலியல் சித்திரவதை - வரதட்சணை கொடுமை காரணமாகவோ அவனுடன் இனியும் சேர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டால், அவனிடமிருந்து பிரிந்து போய் தனியாக வாழுகிறார்கள்; இல்லை, மணவிலக்கு பெற்றுக் கொண்டு மறுமணம் கூடச் செய்து கொள்கிறார்கள்.

பிடிக்காத கணவனோடு சேர்ந்து சலிப்போடு வாழ்வதை விட, வேறொரு ஆணுடன் இரகசியக் கள்ள உறவு வைத்துக் கொண்டு போலித்தனமாக வாழ்வதைவிட, மணவிலக்கு பெற்று, மறுமணம் செய்து கொள்வது, பாலியல் சுதந்திரத்தைவிட, முற்போக்கானது மட்டுமல்ல; சமூக ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதும், நியாயமானதும்கூட.

திருமணம், குடும்பம் ஆகியவற்றின் வரலாற்று வளர்ச்சி குறித்து ஆராய்ந்த எங்கெல்ஸ், ''ஆண்களுடைய வழக்கமான ஒழுக்கக் கேட்டைப் பெண்கள் சகித்துக் கொண்டிருக்கும்படி கட்டாயப்படுத்துகின்ற பொருளாதார நோக்கங்கள் - தமது வாழ்க்கையைப் பற்றிய கவலை, அதற்கும் மேலாக, தமது குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை - மறைகின்ற பொழுது ஏற்படுகின்ற ஆண்-பெண் சமத்துவம், பெண்கள் பல கணவர் முறைக்குப் போய் விடுவதைவிட, ஆண்கள் உண்மையிலேயே ஒருதார மணத்தைக் கடைப்பிடிப்பதற்கும் பேருதவி செய்யும்'' என்று குறிப்பிடுகிறார்.

எங்கெல்ஸ் குறிப்பிடுகின்ற பெண்களின் கவலைகள் மறைய வேண்டும் என்றால், ஆணாதிக்கத்தைத் தூக்கிப் பிடிக்கின்ற, முதலாளித்துவ சமூகம் மறைந்து போக வேண்டும். இச்சமூக மாற்றத்திற்கான போராட்டத்திற்கு பெண்களை அணிதிரட்ட, பாலியல் கருத்துக்களைத்தான் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற அவசியமே கிடையாது. ''பெண்கள் உழைப்பு கொடூரமாகச் சுரண்டப்படுவது; பெண் கல்வி மறுக்கப்படுவது; வரதட்சணை சாவுகள்; வரதட்சணைக் கொடுமையால் திருமணம் தள்ளிப் போவது'' எனப் பெண்களைப் பாதிக்கும் பிற பிரச்சினைகளை முன் வைத்தே அவர்களை அணிதிரட்டிவிட முடியும்.

தாராளமயம், மேட்டுக்குடிப் பெண்களைப் ''பாலியல் சுதந்திரத்தை'' நோக்கித் துரத்துகிறது என்றால், அடித்தட்டு வர்க்கப் பெண்களை சமூகப் புரட்சியை நோக்கி நெட்டித் தள்ளுகிறது. தாராளமயத்தை எதிர்த்து நடக்கும் போராட்டத்தின் வீச்சு அடுப்படியில் முடங்கிக் கிடக்கும் பெண்களைத் தெருவுக்கு இழுத்து விடுகிறது. சென்னை - இராணி மேரி கல்லூரி மாணவிகள் நடத்திய போராட்டம் தமிழகத்தையே உலுக்கி எடுத்ததையும்; மணிப்பூர் மாநிலத்தில் வயதான தாய்மார்கள், இந்திய இராணுவத்தின் பாலியல் வன்கொடுமைகளை எதிர்த்து நடத்திய நிர்வாணப் போராட்டம் இந்தியாவையே உலுக்கி எடுத்ததையும் நாம் மறந்து விட முடியுமா?

அடித்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்கள் மத்தியில் உருவாகி வரும் இப்புதிய பண்பாட்டை ஆதரித்து இந்தியா-டுடே சிறப்பிதழ் வெளியிடாது. குஷ்பு கருத்துச் சொல்ல மாட்டார்; இப்புதிய பண்பாட்டை நாம் தான் அடையாளப்படுத்தி வளர்த்துச் செல்ல வேண்டும்.

ஆனால், இராமதாசும், திருமாவளவனும் ''கற்பு என்ற தமிழ் பண்பாட்டைப் பாதுகாப்பதற்காக'' அடித்தட்டு பெண்களைத் தூண்டிவிடுகிறார்கள். இந்தக் ''கற்புடமை'' பண்பாடு பெண்களை, சமூக உற்பத்தியிலும், வர்க்கப் போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொள்ள விடாமல் தடுத்து, அவர்களை அடுப்படியிலேயே முடக்கிவிடும் நயவஞ்சகம் நிறைந்தது என்பதை நாம் புதிதாக எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அதேசமயம், ''கற்பு''க்கு எதிராக இந்தியா-டுடே வகையறாக்கள் முன் வைக்கும் ''பாலியல் சுதந்திரமோ'' இளைஞர்களின் சிந்தனையை நஞ்சாக்கக் கூடியது!

● செல்வம்

## ஏழை நாடுகளின் அந்நியக் கடன் தள்ளுபடி:

# மறுகாலனியாதிக்கத்தின் 'மனித முகம்'

**வ**றுமை, பஞ்சம், பட்டினிச் சாவுகள் உலகெங்கிலும் பரவலாகக் காணப்பட்டாலும், இந்த மூன்றும் மற்ற நாடுகளைவிட, ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த மிகவும் வறிய-ஏழை நாடுகளை ஒரு சாபக்கேடு போல பிடித்தாட்டி வருவதை யாரும் மறுக்க முடியாது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு எத்தியோப்பியா; பத்தாண்டுகளுக்கு முன்பு சோமாலியா; இப்பொழுது நைஜர், பர்கினோ ஃபாஸோ, மாலி, மொரிதானியா ஆகிய மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் பட்டினிச் சாவின் பிடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளன.

இந்நாடுகளில் வயதுக்கு வந்த பெரியவர்கள் காட்டுக் கிழங்குகளைத் தின்று உயிரைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். ஆனால், ஐந்து வயதுக்குக் கீழான குழந்தைகளுக்கு ஒரு சொட்டு பால்கூடக் கிடைக்காததால், பட்டினியால் கொத்துக் கொத்தாக மடிந்து கொண்டிருக்கின்றன. வயல்வெளியெங்கும் செத்துப் போன ஆடு, மாடுகளின் எலும்புகள் சிதறிக் கிடப்பதைப் பார்க்கும் பொழுது, ''திறந்தவெளி இறைச்சி வெட்டும், கூடத்தில்'' நுழைந்துவிட்டதைப் போன்ற பீதி ஏற்படுகிறது.

அதிகார வர்க்கத்தின் கணக்குப்படியே நைஜரில் 36 இலட்சம் பேர்; பர்கினோ ஃபாஸோவில் 5 இலட்சம் பேர்; மாலியில் 11 இலட்சம் பேர்; மொரிதானியாவில் 8 இலட்சம் பேர் பட்டினிச் சாவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்க கண்டத்தில் நடக்கும் இப்பட்டினிச் சாவுகளைத் தடுத்து நிறுத்தக் கோரி, ஐரோப்பாவில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்த பிறகுதான், ஏகாதிபத்திய நாடுகளின் எடுபிடியான ஐ.நா.மன்றம் ''கஞ்சித் தொட்டி''யைத் திறக்க முன்வந்தது; — அதுவும் நைஜரில் மட்டும்.

இதே சமயத்தில் ஸ்காட்லாந்தின் க்ளென்ஈகிள்ஸ் என்ற நகரில் கூடிய ஜி-8 நாடுகளின் (அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ரசியா, கனடா, ஜப்பான்) தலைவர்கள், ஆப்பிரிக்காவில் இருந்து மட்டுமல்ல, உலகில் இருந்தே வறுமையை ஒழித்துக் கட்டப் போவதாகச் சபதம் எடுத்துக் கொண்டார்கள். இதற்காக, மிகவும் வறிய 18 ஏழை நாடுகள் தர வேண்டிய கடன்களை ரத்து செய்யப் போவதாக அறிவித்தார்கள். தற்பொழுது பட்டினிச் சாவுகள் நடந்து கொண்டிருக்கும் நான்கு ஆப்பிரிக்க நாடுகள் உள்ளிட்டு, 12 ஆப்பிரிக்க நாடுகள் இக்கடன் தள்ளுபடியால் பயன்பெறும் என்று ஜி-8 மாநாட்டில் ஆரவாரமாக அறிவிக்கப்பட்டது.

மேலும், ''2010-க்குப் பிறகு ஏகாதிபத்திய நாடுகள், ஏழை நாடுகளுக்குச் செய்யும் உதவி 4,000 கோடி அமெரிக்க டாலர்கள் (ஏறத்தாழ 1,80,000 கோடி ரூபாய்) அதிகரிக்கும். இதில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு 2,500 கோடி அமெரிக்க டாலர்கள் (1,12,500 கோடி ரூபாய்) கூடுதலாக உதவி கிடைக்கும்'' என்றும் ஜி-8 நாடுகளின் தலைவர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர்.

இதைக் கேட்கும்பொழுது, 18 ஏழை நாடுகளின் வெளிநாட்டுக் கடன்கள் அனைத்தும் அடியோடு ரத்து செய்யப்படும்; இக்கடன் தள்ளுபடி போக, நிதியுதவி கிடைக்கும் என்று நாம் கற்பனை செய்து கொண்டால், நம்மை விட ஏமாளி வேறு யாரும் இருக்க முடியாது.

''உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள்தான் ரத்து செய்யப்படும். இதிலும் கூட, இந்த நிதி நிறுவனங்களிடமிருந்து வணிக நோக்கத்திற்காகப் பெறப்பட்ட கடன்கள் ரத்து செய்யப்படமாட்டாது. இந்த நிதி நிறுவனங்கள் அல்லாது, வேறு சர்வதேச நிதி நிறுவங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களும் தள்ளுபடியாகாது. இதற்கும் மேலாக, இக்கடன் தள்ளுபடியால், இந்த மூன்று நிதி நிறுவனங்களுக்கும் ஏற்படக்கூடிய நட்டத்தை ஈடு செய்வதற்கு ஏற்றவாறு, ஏகாதிபத்திய நாடுகள் நிதி அளித்தால்தான் கடன் தள்ளுபடி

www.padippakam.com

நடைமுறைக்கு வரும்'' - இவைய னைத்தும் கடன் தள்ளுபடி என்ற டாம் பீக அறிவிப்பின் பின் மறைந்துள்ள நிபந்தனைகள்.

இது ஒருபுறமிருக்க, ரசிய ஏகாதி பத்தியம் தனது சார்பாக எவ்வளவு கடன் தள்ளுபடி செய்யப்படுகிறதோ, அதையே தனது கூடுதல் நிதியுதவி யாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறிவிட்டது. பிரான்சு ஏகாதிபத் தியம், தான் அளிக்க வேண்டிய கூடு தல் நிதியுதவியில், மூன்றில் ஒரு பங்கு கடன் தள்ளுபடியாக இருக்கும் எனக் கூறிவிட்டது. கூட்டிக் கழித்துப் பார்த் தால், 18 ஏழை நாடுகளின் வறுமையை ஒழிக்க ஏகாதிபத்திய நாடுகள் அறிவித் துள்ள கடன் தள்ளுபடி - கூடுதல் நிதியு தவி என்பது வெறும் ஏட்டுச் சுரைக்கா யாகத் தான் இருக்கும் என முதலாளித் துவ பொருளாதார நிபுணர்களே நையாண்டி செய்கிறார்கள்.

•••



ஏகாதிபத்தியங்கள் செயற்கையாக உருவாக்கிய பஞ்சம் - பட்டினியால் பாதிக்கப்பட்டு, எலும்பும் தோலுமாக உயிருக்குப் போராடும் நைஜர் நாட்டுச் சிறுவன்.

ஆப்பிரிக்காவைப் பிடித்தாட்டும் வறுமைக்கும், பஞ்சத்திற்கும் அக்கண் டத்து நாடுகளில் நடைபெறும் சர்வாதி கார - ஊழல் ஆட்சி, இனக்குழுக் களுக்கு இடையேயான சண்டை இவைதான் காரணம் என ஏகாதிபத்திய நாடுகள் குற்றஞ் சுமத்துகின்றன. எனவே, கடன் தள்ளுபடி பெற விரும் பும் ஆப்பிரிக்க ஏழை நாடுகள், வளர்ச் சிக்கும், முன்னேற்றத்துக்கும் இட்டுச் செல்லும் நல்லாட்சி நடைபெற உத்தர வாதம் அளிக்க வேண்டும் என நிபந் தனை விதிக்கின்றன.

''எண்ணெய் வயல் நிறைந்த நைஜீ ரியாவில் நடந்த இராணுவ சர்வாதிகார ஆட்சியை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தேசங்கடந்த எண்ணெய் தொழிற்கழகமான ''ஷெல்'' தான் தாங் கிப் பிடித்தது; காங்கோவில் நடந்த மொபுடுவின் சர்வாதிகார ஆட்சிக்கு, பன்னாட்டு சுரங்கத் தொழிற்கழகங்கள் தான் முட்டுக் கொடுத்தன; ருவாண்டா வில் நடந்த ஹூடு - டுட்ஸி இன மோத லுக்கு பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிதான் காரணமாக அமைந்தது; சியாரா லியோனின் வைரச் சுரங்கங்களைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்காகவே, அந்நாட்டில் ஏகாதிபத்தியங்களால் உள்நாட்டுக் கல வரம் தூண்டிவிடப்பட்டது'' என நீளமாகப் போகும் இந்தப் பழைய வர லாற்றை மறந்துவிட்டால், நாமும் ஏகா திபத்தியங்களின் நல்லாட்சி திட்டத் திற்கு ''ஜெ'' போடலாம்.

ஆப்பிரிக்காவை இருண்ட கண்ட மாக்கிய ஏகாதிபத்தியங்களின் சதி ஒரு புறம் இருக்கட்டும். ''வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் இட்டுச் செல்லும் நல்லாட்சி'' என்பதன் உண்மையான பொருள் என்ன தெரியுமா?

ஏகாதிபத்தியங்கள் அறிவித்துள்ள கடன் தள்ளுபடி சலுகையைப் பெறப் போகும் 18 நாடுகளுள் ஜாம்பியாவும் ஒன்று. இந்தச் சலுகையைப் பெறுவதற் காக, ஜாம்பியா, ஏகாதிபத்தியங்களின் கட்டளைப்படி, சமூக நலத்திட்டங்க ளுக்காக ஒதுக்கப்படும் தொகையை மேலும், மேலும் வெட்டித் தள்ளுகி றது.

இந்தப் பதினெட்டு நாடுகளுள் ஒன்றான கானா, தனது நாட்டின் விவசா யத்தையும் கால்நடை வளர்ப்புத் தொழிலையும் பாதுகாக்க, சிறப்புச் சட் டமொன்றினை இயற்றி வைத்திருந் தது. இச்சட்டத்தை நீக்கினால்தான் கானாவிற்குக் கூடுதல் நிதியுதவி கிடைக்கும் என உலக வங்கியும், சர்வ தேச நாணய நிதியமும் நெருக்குதல் கொடுத்ததையடுத்து, இச்சட்டம் நீக்கப் பட்டது. இதையடுத்து, அமெரிக்க ஏகா திபத்தியம் அந்நாட்டின் அரிசிச் சந்தை யில் 40 சதவீதத்தைக் கைப்பற்றிக் கொண்டதால், அந்நாட்டின் உள்நாட்டு அரிசி உற்பததியே நிலைகுலைந்து போய்விட்டது.

கடன் தள்ளுபடி பெற விரும்பும் ஏழை நாடுகள் தனியார்மயம் - தாராள மயத்தை மேலும் தீவிரப்படுத்தினால் தான், ஏகாதிபத்தியங்களிடமிருந்து நல்லாட்சி சான்றிதழைப் பெற முடி யும். இதை, ''ஆப்பிரிக்க வளர்ச்சி மற் றும் வாய்ப்புகள்'' என்ற அமெரிக்கச் சட்டம் மிகவும் பச்சையாகவே கூறுகி றது:

''தனியார் சொத்துரிமையைப் பாது காக்கக் கூடிய சந்தைப் பொருளாதா ரத்தை ஊக்குவிக்க வேண்டும்; அமெ ரிக்காவின் வர்த்தகத்திற்கும், மூலதனத் திற்கும் தடையாக இருக்கக் கூடியச் சட் டங்களை நீக்க வேண்டும்; அமெரிக்கா வின் வெளிநாட்டுக் கொள்கைக்கு - நாடு பிடிக்கும் மேலாதிக்கப் போர் வெறிக்கு - ஒத்துழைப்பு தரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.''

தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் திணிக் கும் இந்த சந்தை பயங்கரவாதம்தான், மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் பஞ்சத் தையும், பட்டினிச் சாவுகளையும் ஏற்ப டுத்தியுள்ளது. இந்த உண்மையை நைஜர் நாட்டு நிலைமை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது.

நைஜர் நாட்டு மக்கள் அரைக்க வளம் சோறு கிடைக்காமல் பட்டினி யால் செத்துக் கொண்டிருக்கும்போது, அந்நாட்டு அரசும், தரகு முதலாளிக ளும் அண்டை நாடான நைஜீரியா வுக்கு அரிசியை ஏற்றுமதி செய்கிறார் கள்.

நைஜர் நாட்டு ஏழை விவசாயிகள், தங்களின் குழந்தைகளுக்குப் பால் கூட வாங்க முடியாமல் போண்டியாகி



படிப்பகம்

www.padippakam.com

நிற்கும் பொழுது, அந்நாட்டுத் தலைநகரில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் ஒரு காபிக்கு ஏழு வகையான ஜீனி பரிமாறப்படுவதைக் குறிப்பிட்டு, அந்நாட்டில் செல்வம் ஒரு பக்கமும்; ஏழ்மையும் பட்டினியும் ஒரு பக்கமும் குவிந்து கிடப்பதை அம்பலப்படுத்துகிறார், ஒரு பத்திரிகையாளர்.



ஸ்காட்லாந்தின் க்ளென் ஈகிள்ஸ் நகரில் நடந்த ஜி-8 நாடுகளின் மாநாட்டின் மோசடித்தனத்தைக் கண்டித்து, எடின்பர்க் நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது, போலீசாரோடு நடந்த மோதல்.

மல்ல, அந்நாட்டு மக்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளையும் பூர்த்தி செய்து, வறுமையையும், பஞ்சத்தையும் ஓட ஓட விரட்டியிருக்க முடியும்.

• ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்கள், தனியார் மயம் - தாராளமயத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் ஆப்பிரிக்க கண்ட நாடுகளில் இருந்து 10,400 கோடி ரூபாயை இலாபமாகக் கொள்ளையடித்துச் செல்கின்றன. இது, ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏகாதிபத்திய நாடுகள் வழங்கும் வருடாந்திர நிதி உதவியை விட 14 மடங்கு அதிகம்.

கடந்த ஏப்ரல் மாதம் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்க வேண்டும் எனக் கோரி, அந்நாட்டு தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பொழுது, ஐ.நா. மன்றமும், நைஜர் அரசும், ''இலசமாக அரிசி வழங்கினால், சந்தை பாதிக்கப்படும்'' என்ற மனிதத் தன்மையற்ற, இலாபவெறி பிடித்த காரணத்தைக் கூறி, இலவசமாக உணவுப் பொருட்கள் வழங்க மறுத்துவிட்டார்கள். இதற்குப் பரிசாகத்தான் ஏகாதிபத்திய நாடுகள், நைஜருக்குக் கடன் தள்ளுபடி என்று சலுகையைத் தூக்கிக் கொடுத்துள்ளன.

உண்மை இப்படியிருக்க ஏகாதிபத்தியங்களோ மழையின்மை, வெட்டுக்கிளி படையெப்பு போன்ற இயற்கை சீற்றங்களின் மீது பழியைப் போட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ள முயலுகின்றன.

•••

• 1970 தொடங்கி 2002 வரையில், ஆப்பிரிக்க நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து வாங்கிய கடன் 54,000 கோடி அமெரிக்க டாலர்கள்; இந்த 32 ஆண்டுகளில், வாங்கிய கடனுக்கு வட்டியாகவும், அசலாகவும் அந்நாடுகள் திருப்பிச் செலுத்தியிருக்கும் தொகை 55,000 கோடி அமெரிக்க டாலர்கள். வாங்கிய கடனுக்கு மேலே 1,000 கோடி அமெரிக்க டாலர்கள் (45,000 கோடி ரூபாய்) திருப்பிச் செலுத்திய பிறகும், கந்துவட்டிக்காரன் கணக்குப் போல, ஏகாதிபத்திய நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள் இன்னும் திருப்பி அடைக்க வேண்டிய அசல் 29,500 கோடி அமெரிக்க டாலர்கள் எனக் கணக்கு காட்டுகின்றன.

• ஆப்பிரிக்காவில் சகாரா பாலைவனத்தையொட்டி அமைந்துள்ள நாடுகளில் இருந்து மட்டும், தாராள இறக்மதி என்ற பெயரில், கடந்த இருபது ஆண்டுகளில் 27,200 கோடி அமெரிக்க டாலர்களை (12,24,000 கோடி ரூபாய்) ஏகாதிபத்திய நாடுகள் கொள்ளையடித்துச் சென்றுள்ளன. இந்தப் பணம் அந்நாடுகளின் கஜானாவில் இருந்திருந்தால், ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து வாங்கிய கடனை மட்டு

**பன்னாட்டு நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் ஆப்பிரிக்க கண்ட நாடுகளில் இருந்து 10,400 கோடி ரூபாயை இலாபமாகக் கொள்ளையடித்துச் செல்கின்றன. இது, ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏகாதிபத்திய நாடுகள் வழங்கும் வருடாந்திர நிதி உதவியை விட 14 மடங்கு அதிகம்.**

- இந்தப் புள்ளிவிவரங்கள் ஆப்பிரிக்காவின் வறுமைக்கும், பஞ்சத்திற்கும் ஏகாதிபத்தியச் சுரண்டல்தான் காரணம் என்பதை மட்டும் எடுத்துக் காட்டவில்லை. ஏகாதிபத்திய நாடுகள் அறிவித்துள்ள கடன் தள்ளுபடி, கூடுதல் நிதியுதவி என்பதெல்லாம் மிகப் பெரிய மோசடி என்பதையும் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.

மாட்டை இரண்டு முறை தோலுரிப்பது என்பார்களே, அதைப் போல, ஏற்கெனவே ''கடன்'' என்ற போர்வையில் ஏழை நாடுகளை அடிமைப்படுத்திவிட்ட ஏகாதிபத்திய நாடுகள், இப்பொழுது தங்களதுச் சுரண்டலையும், மேலாதிக்கத்தையும் தொடரவும், தீவிரப்படுத்தவும் ''கடன் தள்ளுபடி'' என்ற முகமூடியை மாட்டிக் கொண்டு வருகிறார்கள். போலி கம்யூனிஸ்டுகளின் மொழியில் சொன்னால், ''கடன் தள்ளுபடி'' என்பது ஜி-8 நாடுகள் மறுகாலனியாதிக்கத்திற்கு மாட்டிவிட்டுள்ள ''மனித முகம்!''

• ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# தனியார்மயத்தின் தாக்குதலும் தொழிற்சங்கவாதத்தின் தோல்வியும்

## — ஹோண்டா தொழிலாளர் போராட்டப் படிப்பினை

ஜூலை 25-ஆம் தேதி ஹோண்டா தொழிலாளர்கள் மீது போலீசு நடத்திய வெறித்தாக்குதலை நாடே கண்டது. இந்தப் போலீசு அராஜகத்தின் எதிர்வினையாக போலீசைத் திருப்பித் தாக்கிய தொழிலாளி வர்க்கத்தின் கோபத்தை, வீரமதி என்ற பெண்ணின் வீரத்தை, இக்காட்சிகளைக் கண்ட தொழிலாளி வர்க்கம் நாடெங்கும் நடத்திய ஆர்ப்பாட்டங்களைக் கண்டோம். இந்தப் பரபரப்பு அத்தோடு அவிந்து அடங்கிவிட்டது.

அதன்பின் நடந்தது என்ன? சட்ட விரோதமாகக் கதவடைப்பு செய்து தொழிலாளிகளைப் பட்டினியில் தள்ளிய ஹோண்டா நிர்வாகத்தின் மீதும் போலீசார் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா, கைது செய்யப்பட்ட தொழிலாளிகள் விடுவிக்கப்பட்டார்களா, அவர்களது கோரிக்கைகள் நிறைவேறினவா - என்பன போன்ற கேள்விகளுக்கு யாருக்காவது விடை தெரியுமா? தெரிய வாய்ப்பில்லை.

தடியடிக் காட்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த போதே, நாடெங்கும் கண்டனங்கள் எழுந்து கொண்டிருந்த போதே ''யாரையும் மீண்டும் வேலைக்குச் சேர்க்க முடியாது'' என்று திமிராக அறிவித்தது ஹோண்டா நிர்வாகம். அந்நிய முதலீட்டை எதிர்த்துப் பேசி எங்கள் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைக் கெடுக்காதீர்கள் என்று எல்லோருக்கும் வேண்டுகோள் விட்டார், அரியானா முதல்வர் ஹூடா. பிறகு, ஹோண்டா நிர்வாகத்தின் காலில் விழுந்தார். ஏதாவது ஒரு ஒப்பந்தத்திற்கு இணங்குமாறு கெஞ்சினார்.

ஜூலை 30 இரவு முதல்வர் முன்னிலையில் கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்வதாக ஏற்றுக் கொண்ட நிர்வாகம் மறுநாளே 200 காண்டிராக்டு தொழிலாளிகளை வேலை நீக்கம் செய்தது. அடிவாங்கிய தொழிலாளிகள் 63 பேர் மீது போடப்பட்ட கொலை முயற்சி வழக்கு வாபஸ் பெறப்படவில்லை. ஆக.11 வரை அவர்கள் சிறையிலிருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்ட 4 முன்னணித் தொழிலாளிகள் மீது முன்தேதியிட்டு கொலை வழக்கும் திருட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டன.

வேலை கிடைப்பதற்கே ஹோண்டா தொழிலாளிகள் கொடுக்க வேண்டியிருந்த விலை இத்தோடு முடியவில்லை. ''நிர்வாகம் நிர்ணயிக்கும் உற்பத்தி இலக்கை எட்டுவேன்; ஆலையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடமாட்டேன்; நிர்வாகம் தீர்மானிக்கும் நன்னடத்தை விதிகளைக் கடைப்பிடிப்பேன்; ஒரு ஆண்டுக்கு ஊதிய உயர்வு பற்றிப் பேச மாட்டேன்'' என்றெல்லாம் எழுதிய ஒரு உறுதிமொழிப் பத்திரத்தில் தனித்தனியே ஒவ்வொரு தொழிலாளியிடமும் கையெழுத்து வாங்கியது நிர்வாகம். அதன் பிறகு தான் ஆலைக்கதவு திறக்கப்பட்டது.

அதேநேரத்தில் சட்டவிரோதமாகக் கதவடைப்புச் செய்த நிர்வாகத்தின் மீதோ, சூழ்ச்சி செய்து தொழிலாளிகளைச் சிக்க வைத்துச் சுற்றி வளைத்துத் தாக்குதல் தொடுத்த போலீசின் மீதோ எவ்வித வழக்கும் இல்லை; நடவடிக்கையும் இல்லை. போராட்டத்திற்குப் பின் நடந்த இந்த அநீதிகள் குறித்து இந்தியத் தொழிலாளி வர்க்கத்துக்கு எதுவும் தெரியாது.

ஒரு பரபரப்புச் சம்பவத்துக்குரிய மலிவான விளம்பர மதிப்புக்கு மேல் வேறெதையும் குர்கான் தொழிலாளி வர்க்கப் போராட்டம் பெற்று விடக் கூடாது என்பதில் அரசும் முதலாளித்துவ ஊடகங்களும் மிகக் கவனமாக இருந்து அவற்றை இருட்டடிப்பு செய்து விட்டன.

நாடறிந்த ஒரு போராட்டத்திற்குப் பின்னும் இத்தகைய அவமானகரமானதொரு ஒப்பந்தம் அந்தத் தொழிலாளி வர்க்கத்தின் மீது திணிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள, போராட்டத்திற்கு முன் அந்த ஆலையில் நிலவிய சூழல் என்ன என்பதை அறிந்து கொள்வதிலிருந்து நாம் தொடங்க வேண்டும்.

ஒரு தொழிலாளியைத் தாக்கிய அதிகாரியைத் தட்டிக் கேட்டதற்காக 4 பேர் வேலை நீக்கம்; அதை எதிர்த்த 50 பேர் தற்காலிக நீக்கம்; இதைத் தொடர்ந்து ஜூன் - 27 முதல் சட்டவிரோதக் கதவடைப்பு; 1000 தொழிலாளர்கள் நீக்கம் - இவைதான் போராட்டத்தைத் தூண்டிய காரணிகள் என்று அப்போது வெளிவந்த செய்திகள் கூறின. எனினும் முழுமையான சித்திரம் என்பது வேறு.

•••

32 நாடுகளில் 109 தொழிற்சாலைகளை இயக்கி வரும் ஜப்பானிய ஹோண்டா நிறுவனம் இரு சக்கர வாகனத் தயாரிப்பில் உலகிலேயே முதலி

போலீசால் தாக்கப்பட்டு காயமடைந்த ''ஹோண்டா'' தொழிலாளி குஷிராமின் சகோதரி வீரமதி, போலீசைத் திருப்பித் தாக்கும் வீரம்: தொழிலாளி வர்க்க கோபத்தின் அடையாளம்.






படிப்பகம்

www.padippakam.com

டத்தில் இருக்கிறது. அரியானா மாநிலம் குர்கானில் நான்காண்டுளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்த ஆலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் 3000 பேர். இவர்களில் 1700 பேர் மட்டுமே நிரந்தரத் தொழிலாளிகள். மீதமுள்ள 1300 பேரில் 800 பேர் தற்காலிகத் தொழிலாளிகள் - ஊதியம் 5000 ரூபாய்; 400 பேர் காண்டிராக்ட் தொழிலாளிகள் - ஊதியம் 2200 ரூபாய்; 100 பேர் அப்ரன்டீஸ் தொழிலாளிகள் - ஊதியம் 1100 ரூபாய். இந்த 1300 பேரும் எந்த நிமிடமும் எந்தக் காரணமும் கூறாமல் நிர்வாகத்தால் வெளியேற்றப்படுவார்கள்.



**தங்கள் பணியை நிரந்தரப்படுத்தக் கோரி தமிழ்நாடு மின்சார வாரிய காண்டிராக்டு தொழிலாளர்கள், சென்னை - அண்ணாசாலையில் நடத்திய சாலை மறியல்: அரசின் கொத்தடிமைகள்.**

ஒரு நொடிக்கு ஒரு ஸ்கூட்டர் வீதம் உற்பத்தி செய்யும் இந்த ஆலையில் எழுதப்படாத ஒரு விதி துவக்கமுதலே அமலில் இருந்து வருகிறது. காலை ஷிப்டில் உரிய உற்பத்தி இலக்கை எட்டத் தவறியிருந்தால், மாலையில் வேலைக்கு வரும் தொழிலாளிகள் அதையும் சேர்த்து முடித்து அன்றைய இலக்கை எட்டியாக வேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும் ஒன்றுக்குப் பதில் இரண்டு எந்திரங்களை இயக்கியாக வேண்டும்.

'மாடர்ன் டைம்ஸ்' எனும் திரைப்படத்தில் சார்லி சாப்ளின் எள்ளி நகையாடும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் கோரமுகம், அதன் முழுப் பரிமாணத்தை ஹோண்டா தொழிற்சாலையில் காட்டியிருக்கிறது. கொடூரமாகக் கசக்கிப் பிழியப்படுவதனால் சதையும் எலும்பும் நைந்து நொறுங்கி தொழிலாளிகள் வெளியேறுவதும், பிள்ளைக்கறி தின்னும் நிர்வாகம் அந்த இடங்களில் இளம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வதும் தொடர்ந்து நடந்து வருகிறது.

சிறுநீர் கழிக்கச் சென்றால் கூட அந்த நேரத்தைப் பதிவு செய்யவேண்டும். அனுமதி பெறவேண்டும். அவ்வாறு அனுமதி கேட்டுக் கிடைக்காமல் தவித்து, தனது எந்திரத்தை 10 நிமிடம் நிறுத்திவிட்டு கழிப்பறை சென்று வந்த தொழிலாளி அந்தக் கணமே வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். பெண் தொழிலாளர்கள் உடை மாற்றும் அறையைக் கண்காணிப்பதும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவதும் வாடிக்கை. ஒரு ஜப்பானிய அதிகாரியின் வன்புணர்ச்சிக்கு இலக்கான பெண், வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஓடியிருக்கிறார். சீக்கியத் தொழிலாளி ஒருவரின் தலைப்பாகை கிழித்தெறியப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இறுதியாக நிர்வாகி ஒருவனால் ஒரு தொழிலாளி தாக்கப்பட, அதைத் தட்டிக் கேட்ட தொழிலாளர்களும் வேலை நீக்கம் செய்யப்பட, தொழிலாளிகளின் கோபம் கொப்பளிக்கத் தொடங்கியிருக்கிறது.

தொழிற்சங்கம் வைப்பதற்கே அனுமதி மறுக்கப்பட்டிருந்த அந்த ஆலையில் ஒரு தொழிற்சங்கம் தொடங்கியாக வேண்டும் என்ற கருத்து சென்ற ஆண்டில்தான் தொழிலாளர்களிடம் உறுதியடையத் தொடங்கியிருக்கிறது. அதைத் தடுக்க தொழிலாளர்களிடம் வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்குவது, குண்டர்களை வைத்து மிரட்டுவது, குடும்பத்திற்கு எச்சரிக்கைக் கடிதம் எழுதுவது என எல்லா வகையான கிரிமினல் வேலைகளையும் செய்திருக்கிறது நிர்வாகம். இவையனைத்தையும் மீறி இந்த ஆண்டு மே 30-ஆம் தேதி ஏ.ஐ.டி.யு.சி. சங்கம் தொடங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் மே 24-ஆம் தேதியன்றே சங்கத் தலைவர்களான சுரேஷ் கவுர், குந்தன் சிங் மேத்தா ஆகியோரும் மேலும் இரண்டு முன்னணியாளர்களும் எவ்வித விசாரணையுமின்றி நிரந்தர வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். தொடர்ந்து, மேலும் 50 தொழிலாளிகள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஜூன் 26-ஆம் தேதி நள்ளிரவில் ஹோண்டா நிர்வாகத்தின் ஒரு உயரதிகாரியின் தலைமையில் இரண்டு போலீசாரும், 3 ரவுடிகளும் வீடு புகுந்து தூங்கிக் கொண்டிருந்த சங்கத் தலைவர் சுரேஷ் கவுர், செயலர் ஷாஃபி அப்துல் ஆகிய இருவரையும் இரண்டாவது மாடியிலிருந்து கீழே தூக்கி வீசியிருக்கின்றனர். முதுகெலும்பும் காலும் முறிந்து அவர்கள் மருத்துவமனையில் கிடக்க, ஜூன் 27-ஆம் தேதி காலை ஆலைக் கதவுகள் இழுத்து மூடப்பட்டன.

இவ்வாறு ஆலையை மூடுவதற்கான முகாந்திரத்தை உருவாக்க, சங்கம் தொடங்கிய மறுகணமே சதி செய்யத் தொடங்கிவிட்டது நிர்வாகம். கச்சாப் பொருட்களின் சப்ளையை வேண்டுமென்றே குறைத்து உற்பத்தி இலக்கை எட்டமுடியாமல் செய்துவிட்டு "வேண்டுமென்றே மெதுவாக வேலை செய்கிறார்கள்" என்று தொழிலாளர்கள் மீது பழி சுமத்தி அதையே காரணமாக்கி கதவடைப்பு அறிவிக்கப்பட்டது.

காரணம் புரியாமல் திகைத்து நின்ற தொழிலாளர்களிடம், "இனி வேலைநிறுத்தம் செய்ய மாட்டேம், சங்க நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம்" என்றெல்லாம் எழுதி வாங்கிக் கொண்டு அதன் பின்னரும் ஆலையைத் திறக்க மறுத்தது நிர்வாம். 3000 தொழிலாளர்களுமே தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு விட்டதாக அறிவிப்பு வெளிவந்தது. ஆலைக்கு புதிதாக ஆளெடுப்பு செய்வதற்கான விளம்பரமும் ஏற்கெனவே வெளியாகியிருப்பதைத் தொழிலாளிகள் பிறகுதான் தெரிந்து கொண்டார்கள்.

இந்தக் கதவடைப்பும், தொழிலாளியிடம் எழுதி வாங்கும் முறையும், தற்காலிகப் பணிநீக்கத்துக்கான அறிவிப்பும் 1926-இல் இற்றப்பட்ட தொழிற்சங்கச் சட்டத்திற்கே எதிரானவை. ஆனால், இது குறித்து எந்த அரசு அதிகாரியும் ஹோண்டா நிர்வாகத்தைக் கேள்விக்குள்ளாக்கவில்லை. இரண்டாவது மாடியிலிருந்து சங்கத்தலைவர்களைத் தூக்கியெறிந்த அதிகாரிக்கெதிராக வழக்கு கூடப் பதிவு செய்யப்படவில்லை.

இந்த நேரத்தில் வீடு புகுந்து தொழிலாளிகளைப் போலீசார் தூக்கிச் செல்வதும், இத்தகைய இரவு நேர 'ரெய்டு'களுக்கு ஹோண்டா கம்பெனியின் வாகனங்களிலேயே போலீசார் வந்து


படிப்பகம்

www.padippakam.com

இறங்குவதும் புதிதல்ல என்கிறார்கள், தொழிலாளர்கள். அந்நகர போலீசார் பலருக்கு தனது ஸ்கூட்டர்களை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறது ஹோண்டா நிர்வாகம். ஜூலை 25 போலீசு அராகஜம் நாடெங்கும் அம்பலமான பிறகும் ''தொழிலாளர் போராட்டங்கள் நசுக்கப்பட வேண்டும்'' என்று பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கிறார் அந்நகரின் போலீசு ஆணையர்.



ஏற்றுமதியின் மூலம் அரசும், முதலாளிகளும் அமெரிக்க டாலர்களைச் சம்பாதிக்க, எவ்வித உரிமைகளும் இன்றிக் கொத்தடிமைகளைப் போல நடத்தப்படும் ஆயத்த ஆடை தொழிலாளர்கள்.

இந்த அடக்கு முறையும் புதிதல்ல; 1991-இல் உ.பி. மாநில அரசுக்குச் சொந்தமான சிமெண்ட் ஆலை தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்த தொழிலாளர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் கொல்லப்பட்டனர்; 1991-இல் ம.பி.யில் தொழிற்சங்கத் தலைவர் சங்கர் குஹா நியோகி கொல்லப்பட்டார். 1992-இல் குறைந்தபட்ச ஊதியம் கேட்டுப் போராடிய தொழிலாளிகள் 16 பேரும், 1996-இல் இந்த ஹோண்டா ஆலை அருகில் உள்ள பசுபதி மில்லில் வைப்பு நிதி, மருத்துவ வசதி கேட்டுப் போராடிய தொழிலாளிகள் 4 பேரும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கதவடைப்பு மூலம் தொழிலாளிகளை வெளியேற்றுவதை ஒரு முன்மாதிரியாக 2001-இல் செய்து காட்டியது டெல்லியிலுள்ள மாருதி சுசுகி கார் தொழிற்சாலை நிர்வாகம்; இமாசலப் பிரதேசத்திலுள்ள சிறீராம் ஹோண்டா ஆலை ''சங்கத் தலைவர்களை வேலை நீக்கம் செய்தால் அதை எதிர்க்க மாட்டோம்'' என்று தொழிலாளர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டுதான் கதவடைப்பை விலக்கிக் கொண்டது.

•••

இவை சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. இவற்றின் பின்புலத்தில் வைத்துப் பார்க்கும்போதுதான் குர்கான் அடக்குமுறை விடுத்திருக்கும் அபாய அறிவிப்பை தொழிலாளி வர்க்கம் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த 15 ஆண்டுகளில் நடைபெற்றுள்ள தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் புதிய கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படவில்லை. அரசுத்துறை தனியார்மயமாக்கப்படுவதற்கு எதிராகவும், தனியார்மயம் தோற்றுவிக்கும் ஆட்குறைப்புக்கு எதிராகவும், பணிச்சுமை சகிக்கவொண்ணாத அளவுக்கு ஏற்றப்படுவதை எதிர்த்தும், செய்த வேலைக்கு ஊதியம் கோரியும், பணி நிரந்தரம் கோரியும்தான் பெரும்பாலான போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஏற்கெனவே போராடிப் பெற்ற உரிமைகள் பறிபோவதைத் தடுக்கவே இந்தப் போராட்டங்கள்!

ஆனால், அநேகமாக இவையனைத்தும் தோல்வியடைந்திருக்கின்றன அல்லது சரணடைந்திருக்கின்றன. ஆளும் வர்க்கமோ தனது தாக்குதல் நிலையைத் தீவிரப்படுத்தியிருக்கிறது. இத்தகைய போராட்டங்கள் நடத்துவதற்கு அவசியமான அடித்தளத்தையே - அதாவது தொழிற்சங்கம் எனும் அமைப்பையே இல்லாதொழிக்க முயன்று வருகிறது.

இது வெறும் கோரிக்கையளவில் நிற்கவில்லை. தொழிலாளர் நலச் சட்டங்கள் எனப்படுபவையெல்லாம் பழங்காலத்தின் ஓலைச்சுவடிகளாக ஒதுக்கப்பட்டு, கடந்த 15 ஆண்டு காலத்தில் இந்தக் கொத்தடிமை முறைதான் தொழில் துறையில் கோலோச்சுகிறது.

ஏற்றுமதிக்கான உற்பத்தி நடைபெறும் அனைத்து தொழில்களிலும், மறுகாலனியாக்கக் கொள்கைகளின் தளப்பகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலும் (SEZ) எந்தத் தொழிலாளர் நலச் சட்டங்களும் செல்லுபடியாவதில்லை. குறைந்தபட்ச ஊதியம், பணிப் பாதுகாப்பு, வேலைநேரம், தொழிற்சங்கம் போன்ற எந்தத் 'தடை'களும் இல்லாத இந்தக் கும்பினியாட்சி மண்டலங்கள் தொழில்துறையின் முன்மாதிரிகளாக முதலாளி வர்க்கத்தாலும் அரசாலும் போற்றப்படுகின்றன.

அந்நிய முதலீடும், அதனைச் சார்ந்த தொழில் வளர்ச்சியுமே தேச முன்னேற்றம் என்ற கருத்தை போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஊடகங்களும் பரப்பி வரும் நிலையில், மாநில அரசுகள் தத்தம் மாநிலத்தை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைப்பதற்கான போட்டியில் ஈடுபட்டு வரும் சூழலில் இவற்றை அம்பலப்படுத்தாத வரை, மறுகாலனியாக்கத்தை எதிர்த்த அரசியல் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் ஈடுபடுத்தப்படாத வரை தொழிலாளர்களின் உரிமையைக் காப்பாற்றுவது குறித்த பேச்சுகள் பொருளற்றவையாகவே இருக்கும்.

சிந்திய இரத்தம் உலருமுன்னே அடிமை முறியில் கையெழுத்திட நேர்ந்த ஹோண்டா தொழிலாளர்களின் நிலை அவலமானதுதான். ஆனால் ''மனிதமுகம் கொண்ட மறுகாலனியாக்கம் சாத்தியமானதுதான்'' என்று போலி கம்யூனிஸ்டுகள் பரப்பி வரும் பிரமையிலிருந்து இன்னமும் விடுபடாமலிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வு நிலை அதனினும் அவலமானது.

• பாலன்



படிப்பகம்

# பன்னாட்டுக் கம்பெனிக்கு வெண்ணெய் தாழ்த்தப்பட்டோருக்கு சுண்ணாம்பு

**நோ**க்கியா, ஹூண்டாய், ஃபோர்டு முதலான பன்னாட்டு ஏக போக நிறுவனங்களுக்கு தமிழகத்தில் தொழில் தொடங்க உடனடியாக நிலம் ஒதுக்கிக் கொடுத்து, பல்வேறு சலுகைகளையும் செய்து தரும் தமிழக அரசு, கடந்த 23 ஆண்டுகளாக வீட்டுமனை கோரிப் போராடும் தாழ்த்தப்பட்ட மக்களைத் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகிலுள்ள நாட்றாம்பாளையம், காட்டுப் பகுதியைச் சார்ந்த ஓர் ஊராட்சி. கூலி விவசாயிகளான இக்கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் பல்லாண்டு காலமாக பல்வேறு சாதிய அடக்குமுறைகளை அனுபவித்து வந்துள்ளனர். 1982-இல் நாட்றாம்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்கள், தாங்கள் பாதுகாப்பாகக் குடியிருக்க தொகுப்பு வீடுகள் கட்டித் தரக்கோரி விண்ணப்பித்து, பல ஆண்டுகளாக மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டு பல அதிகாரிகளிடம் மனு கொடுத்துப் போராடிய பிறகு, 1996-இல் தான் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் உள்ள இப்பகுதியில் வெறும் 55 குடும்பங்களுக்கு மட்டுமே பட்டா தரப்பட்டது. ஆனால், வீட்டுமனை தரப்படவில்லை. தொகுப்பு வீடுகளும் கட்டப்படவில்லை.

அவசர கதியில் மல்லேசு என்பவரின் நிலத்தை அளந்து காட்டி பட்டா வழங்கிய அதிகாரிகள் மல்லேசிடமிருந்து நிலத்தை வாங்கவில்லை. தனது நிலத்துக்கு உகந்த விலை கிடைக்கவில்லை என்றும், எனவே அரசு இதைக் கையகப்படுத்தக் கூடாது என்றும் மல்லேசு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தடையாணை பெற்றார். இத்தடையாணையை நீக்கி, விரைவில் வீட்டுமனை வழங்கக் கோரி தாழ்த்தப்பட்ட மக்கள் நீதிமன்றத்தில் பலமுறை மனு கொடுத்து ஓய்ந்து விட்டனர். பல ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டோரும் மல்லேசும் நீதிமன்றத்துக்கு அலைந்ததுதான் மிச்சம். எந்த தீர்வும் இல்லாமல் போனதோடு, இப்போது நிலத்தின் மதிப்பும் உயர்ந்து புதிய சிக்கலை ஏற்படுத்தி விட்டது.

அதிகாரிகளையும் நீதிமன்றத்தையும் இனியும் நம்பி ஏமாறத் தயாராக இல்லாத தாழ்த்தப்பட்ட மக்கள், இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணியின் துணையோடு கடந்த செப்.20-ஆம் தேதியன்று தங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள நிலத்தில் குடிசைகள் போட்டு, ''பகத்சிங் நகர்'' என்று பெயர்ப்பலகையும் வைத்தனர். பீதியடைந்த அதிகார வர்க்கம் போலீசை ஏவியது. வி.வி.மு. தோழர்கள் உள்ளிட்டு 15 பேர் மீது பொய் வழக்குகளைச் சோடித்தது போலீசு.

போலீசு அராஜகத்தை எதிர்த்தும், உடனடியாக வீட்டுமனை வழங்கக் கோரியும் போராடும் மக்கள், வி.வி.மு. தலைமையில் அக்.14-ஆம் தேதியன்று தேன்கனிக் கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்து, துண்டறிக்கை - சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதைக் கண்டு அரண்டு போன அதிகாரிகள் அக்.13-ஆம் தேதியன்று நாட்றாம்பாளையம் மக்களை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்தனர். அக்.14-ஆம் தேதியன்று மாவட்ட துணை ஆட்சியர், போலீசு துணை கண்காணிப்பாளர், வட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தையில், உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும், கிராம நிர்வாக அதிகாரியை இடமாற்றம் செய்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர். அதனடிப்படையில் நாட்றாம்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்கள், தற்காலிகமாக ஆர்ப்பாட்டத்தை ஒத்தி வைப்பதாக முடிவு செய்தனர்.

ஆனால் மறுநாளே, அஞ்செட்டி போலீசு துணை ஆய்வாளர் தலைமையில் வந்த போலீசார், பட்டா நிலத்தில் போடப்பட்ட குடிசைகளை பிய்த்தெறியத் தொடங்கினர். இக்கொடுஞ்செயலைக் கண்டு வெகுண்டெழுந்த மக்கள், போலீசாரை முற்றுகையிட்டு கேள்வி கேட்டு முழக்கமிடத் தொடங்கியதும், போலீசுப் படை பின்வாங்கிச் சென்றது. குடிசைகளைப் பிய்த்தெறிந்து அடக்குமுறையை ஏவுவது, மல்லேசுவுடன் தாழ்த்தப்பட்ட மக்களை மோதவிட்டு பிரச்சினையைத் திசைதிருப்புவது, வி.வி.மு.வினரை தீவிரவாதிகள் - பயங்கரவாதிகளாகச் சித்தரித்து பீதியூட்டி போராடும் மக்கள் மீது பொய் வழக்குகளைச் சோடிப்பது - என்று பல்வேறு சதிகளில் போலீசும் அதிகார வர்க்கமும் இறங்கியுள்ளன.

— விவசாயிகள் விடுதலை முன்னணி, கிருஷ்ணகிரி மாவட்டம்.





இப்போது விற்பனையில்...

**உதவியா சதியா?**

– அமெரிக்க அறக்கட்டளைகள் பற்றிய புதிய ஆய்வு

அமெரிக்க அறக்கட்டளைகளின் சதிகள், ஏழை நாடுகளில் புற்றீசல்களாகப் பெருக்கி அவை வளர்க்கும் அரசு சாரா அமைப்புகளின் கீழ்த்தரமான சீர்குலைவு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தும் நூல்.

கீழைக்காற்று வெளியீடு விலை: ரூ. 10/-

**ஊழியர்கள் தலைவர்கள்** — சென்யுன்

சீனப்பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களில் ஒருவரான சென்யுன், ஊழியர் பயிற்சி வகுப்புகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு. பொதுவுடைமைக் கட்சி ஊழியர்களுக்கும் தலைவர்களுக்கும் வழிகாட்டும் நூல்.

கீழைக்காற்று வெளியீடு விலை: ரூ. 15/-




நூல்கள் கிடைக்குமிடம்:

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.
✆: 044 - 28412367

www.padippakam.com

# குடிநீர் பிரச்சினை குறித்த உலக வங்கியின் அறிக்கை:

# ஓநாயின் கவலை

இந்தியாவின் அணுசக்தி கொள்கையை, இனி அமெரிக்காதான் தீர்மானிக்கப் போகிறது என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது. இது போனால் கூட, மற்ற கொள்கைகளைத் தீர்மானிக்கும் உரிமையும், சுதந்திரமும் இந்திய அரசிற்கு இருக்கிறா என்றால், இந்தியாவில் ஓடும் சாக்கடைகளைச் சுத்தப்படுத்துவதைக் கூட நாங்கள்தான் தீர்மானிப்போம் என்கிறது உலக வங்கி. இந்திய அரசு, தனது குடிமக்களுக்குக் குடிநீர் வழங்குவது; கழிவுநீர் அகற்றுவது போன்ற சுகாதாரப் பணிகளைச் செய்வதை எதிர்காலத்தில் எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும்; என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பது குறித்து ''இந்தியாவின் தண்ணீர் பொருளாதாரம்'', ''இந்தியாவின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்'' என்ற இரு அறிக்கைகளை உலக வங்கி, சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

''இந்தியாவின் நகர்ப்புற, கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வழங்குவது விரிவடைந்து கொண்டே போனாலும், இது நம்பக் கூடியதாக இல்லை'' எனக் குறைபட்டுக் கொள்கிறது உலக வங்கியின் அறிக்கை. குழாயைத் திறந்தால் காற்று வருமா, தண்ணீர் வருமா? தண்ணீர் வந்தாலும் சுத்தமாக வருமா, சாக்கடைத் தண்ணீருடன் கலந்து வருமா? எனத் தினம் தினம் பொது மக்கள் சந்திக்கும் பிரச்சினையைத்தான் உலக வங்கியும் குறிப்பிடுகிறது.

இந்தக் குறைபாடு நிலவுவதற்குக் காரணம், ''இந்தியாவிற்கு தண்ணீரை ஒழுங்காக நிர்வாகம் செய்யத் தெரியவில்லை; நீர் ஆதார உரிமைகள்; தனியாருக்கு அனுமதி கொடுப்பது; போட்டி; ஒளிவு மறைவற்ற தன்மை; பதில் சொல்லும் பொறுப்பு ஆகிய விசயங்களில் இந்தியா அக்கறை செலுத்த மறுப்பதால்தான், நிர்வாகமும் ஒழுங்காக நடப்பதில்லை'' என உலக வங்கி குற்றம் சுமத்துகிறது.

இப்படி வார்த்தைகளைப் பின்னி பின்னிப் போட்டு உலக வங்கி சொல்ல வருவது இதைத்தான்: ''குடிநீர் விநியோகிப்பதில் தனியார்மயம் இல்லை; அதனால் நிர்வாகம் சரியில்லை''. இதனை, உலக வங்கி மிகவும் சூசகமாகத் தனது அறிக்கையில், ''1991-இல் புகுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள், நிதித்துறையில் இருந்து கீழ் இறங்கி, இன்னும் ஆழமாக பெரும்பான்மையான துறைகளுக்குச் செல்ல வேண்டும்'' எனச் சுட்டிக் காட்டியுள்ளது; மேலும், ''குடிநீர் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டாம்; இருப்பதை நல்ல முறையில் நிர்வகிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்'' என இந்திய அரசிற்கு அறிவுரை கூறியிருக்கிறது.

''எங்கள் கிராமத்திற்குக் குடிநீர் தொட்டி கட்டிக் கொடுங்கள்; எங்கள் தெருவுக்குப் பொதுக் குழாய் போட்டுக் கொடுங்கள் எனப் பொது மக்கள் கேட்டால், மறுத்துவிடுங்கள்; ஏற்கெனவே போடப்பட்ட குடிநீர் திட்டங்களைத் தனியாரிடம் ஒப்படைத்து விடுங்கள்'' என்பது தான் இதன் பொருள்.

தில்லி நகர குடிநீர் விநியோகம் தனியார்மயமான பின்னும் ''பிரச்சினை'' தீரவில்லை: லாரி தண்ணீரைப் பிடிக்க அலைமோதும் தில்லி புறநகர் பகுதி ஏழை மக்கள்.



இந்திய மக்கள் சந்திக்கும் குடிநீர் பிரச்சினை, பாசன நீர் பிரச்சினை, வறட்சி ஆகியவற்றைச் சமாளிக்க இந்தியாவில் ஓடும் நதிகளைத் தேசியமயமாக்குவதுதான் ஒரே தீர்வு என ஓட்டுக் கட்சிகள் ஒப்பாரி வைக்கும் பொழுது, உலக வங்கியின் அறிக்கை, ''அது தவறு'' எனக் குறிப்பிடுகிறது; அதற்கு மாறாக, ''குடிநீர், பாசனத் திட்டங்களைக் கட்டுவது, அதைக் கட்டுப்படுத்துவது போன்ற பொறுப்புகளை வகிக்கும் அரசு, அதில் இருந்து விலகிக் கொண்டு, அந்தப் பொறுப்புகளை பெரிய கம்பெனிகள், சிறிய விவசாயிகள் போன்று தண்ணீரைப் பயன்படுத்துவோரிடம் விட்டு விட வேண்டும்; அந்தச் சூழலை விரைவில் ஏற்படுத்த வேண்டும்'' என அறிவுறுத்துகிறது.

''இந்திய மக்களுக்கும், இந்தியப் பொருளாதாரத்துக்கும் தேவைப்படும் தண்ணீர் வழங்குவதற்குரிய திட்டங்களை நிறைவேற்றும் அளவிற்கு இந்திய அரசிடம் பணம் இல்லை; கலவரம் நிறைந்த எதிர்காலத்தை இந்தியா எதிர்நோக்கியிருக்கிறது'' எனப் பயமுறுத்தும் இந்த அறிக்கை, இதற்குக் காரணம், ''தண்ணீரைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் மிகவும் குறைவாக இருக்கிறது; குடிநீர் திட்டங்களைப் பராமரிக்கும் அளவிற்குக் கூட வருவாய் கிடைப்பதில்லை. திட்டச் செலவிற்கும், கட்டணத்திற்கும் இடையேயுள்ள இடைவெளி, ஊழலை உருவாக்குகிறது; திட்டத்திற்கு எவ்வளவு செலவானது; எவ்வளவு மானியம் வழங்கப்பட்டது என்ற விவரங்கள் கூட, வெளிப்படையாக இல்லாமல் இரகசியமாக வைக்கப்படுகின்றன'' எனக் குறிப்பிடுகிறது.

''கிராமப்புறங்களுக்குக் குடிநீர் வழங்க போடப்பட்டுள்ள ''ஸ்வஜல்தாரா'' திட்டத்திற்கான மூலதனச் செலவில் ஒரு பகுதியை, அத்திட்டத்தால் பயன் அடைபவர்களிடமி



படிப்பகம்

www.padippakam.com

ருந்து வசூலிக்க வேண்டும்; விவசாயி களாக இருந்தாலும், வறுமை கோட்டுக் குக் கீழே வாழும் ஏழைகளாக இருந்தா லும், தண்ணீருக்கு உரிய கட்டணத்தை வசூலிக்க வேண்டும்; இந்தக் கட்டணம் பொதுவான வரி என்றில்லாமல், திட் டச் செலவைத் திரும்ப எடுக்கும் வகை யில் இருக்க வேண்டும்; போட்ட மூலத னத்தைத் திரும்ப எடுக்கக் கூடிய குடிநீர் திட்டங்களைத்தான் செயல்படுத்த வேண்டும். தனியார் பங்கெடுப்பதை அனுமதிக்க வேண்டும். தற்பொழுது குடிநீர் வழங்குதலை நிர்வகிப்பதைப் போல, இனியும் நிர்வகிக்காமல் அர சாங்கம் தன்னை மாற்றிக் கொள்ள வேண் டும். இதற்குத் தகுந்தபடி இந்திய மக்க ளின் மனப் போக்கையும் மாற்ற வேண் டும்'' எனத் தீர்வுகளை அடுக்கியிருக்கி றது, உலகவங்கி.

குடிநீர் வழங்குவது இனியும் சேவையாக இருக்கக் கூடாது; அது அர சாங்கத்தின் கைகளில் இருந்து விடுவிக் கப்பட்டு, இலாபத்தை அள்ளித் தரும் வியாபாரமாக மாற வேண்டும் என்பது தான் உலக வங்கியின் ஆலோசனை.



இந்தியாவின் தண்ணீர் பிரச்சினை குறித்த அறிக்கையை வெளியிடும் உலக வங்கியின் நாட்டுப்புற இயக்குநர் ஜான்பிரிஸ்கோ.

இதனை, வெறும் காகித அறிக்கை என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இந்தியாவின் குடிநீர் கொள்கையும், விவசாயப் பாசனக் கொள்கையும் தனி யார்மயமாவதை நோக்கித்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. மேலும், உலக வங்கி அடுத்த நான்கு ஆண்டுக ளில், இந்தியாவின் குடிநீர் திட்டங்க ளுக்கு வழங்கும் கடனை 20 கோடி அமெரிக்க டாலரில் இருந்து 80 கோடி அமெரிக்க டாலராக உயர்த்தப் போவ தாக அறிவித்திருக்கிறது. இந்தக் கடனை வாங்க இந்திய அரசு கைநீட் டும் பொழுது, இந்த அறிவுரைகள், கட் டாயம் செயல்படுத்த வேண்டிய நிபந்த னைகளாக மாறிவிடும்.

பிரதமர் மன்மோகன் சிங், இந்த ஆண்டு 'சுதந்திர' தின உரையில், ''மின் சாரம் உள்ளிட்டு எதனையும் இலவச மாக வழங்க முடியாது'' எனக் கூறி னார். இது உலக வங்கியின் மொழி. கிளிப்பிள்ளை சொன்னதைத் திருப்பிச் சொல்லும். ''பொருளாதாரப் புலி'' மன் மோகன் சிங்,உலக வங்கியின் அறிவு ரையை நடைமுறைப்படுத்துவார்.

• அழகு

# ''தரைக்கடை வியாபாரிகளின் வாழ்வுரிமையைப் பறிக்காதே!''
# — கண்டன ஆர்ப்பாட்டம்

நகரத்தை அழகுபடுத்துவதாக கூறிக் கொண்டு, உலக வங்கியிடம் வாங்கிய கடனுக்காக ''போக்குவரத்து நெருக் கடி'' என்ற பொய்க் காரணத்தைக் காட்டி, பண்டிகைக் காலத் திலும் தரைக் கடைகள் போடத் தடை விதித்துள்ளது, திருச்சி மாநகராட்சி. என்.எஸ்.பி.ரோடு, தெப்பக்குளம் பகுதியில் பல தலைமுறைகளாக தரைக்கடை போட்டு வியாபாரம் செய்து வந்த சிறுவியாபாரிகள் போலீசாராலும் மாநகராட்சி யாலும் தடுத்து விரட்டப்பட்டதை எதிர்த்தும், மீண்டும் தரைக்கடைகள் போட அனுமதி கோரியும் கடந்த ஐந்தாண்டு களாக தரைக்கடை வியாபாரிகள் போராடி வருகின்றனர். தற் போது பண்டிகைக் கால சூழலிலும் கூட இவர்களுக்கு அனு மதி மறுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெருக்கடி என்று காரணம் காட்டி தரைக் கடை வியாபாரிகளை விரட்டும் மாநகராட்சி ''சாரதாஸ்'', ''மங்கள் அண்டு மங்கள்'', ''சென்னை சில்க்ஸ்'' முதலான நிறுவனங்கள் சாலையையே மறித்து வாடிக்கையாளர்களின் வாகன நிறுத்துமிடமாக மாற் றியுள்ளதைத் தடுப்ப தில்லை. நடவடிக்கையும் எடுப்பதில்லை. தரைக்கடை வியாபாரிகள், சிறு வியாபா ரிகளை ஒழித்துக் கட்டிவிட்டு பன்னாட்டு கம்பெனிகளின் பொருட்களை விற்பவர்க ளுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டும் என் பதே நகரை அழகுபடுத்து வது என்ற பெயரில் வந் துள்ள உலக வங்கியின் உத்த ரவு. அதை விசுவாசமாகச் செயல்படுத்தும் அதிகார வர்க்கமும் போலீசும் போக்குவரத் துக்கு இடையூறு என்று தரைக்கடை வியாபாரிகளின் வாழ்வு ரிமையைப் பறிக்கின்றன. கோடிக்கணக்கான உழைக்கும் மக் களால் உருவான நகரங்கள், இன்று பத்து சதவீத பணக்காரர்க ளுக்கானதாக மாறி வருகின்றன. ஏழைகள் நகரத்தை விட்டே விரட்டப்படுகின்றனர். இது தரைக்கடை வியாபாரிகளின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல. உழைக்கும் மக்கள் மீது, தனி யார்மயம் - தாராளமயம் - உலகமயம் தோற்றுவித்துள்ள கொடிய தாக்குதல். இதனை உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து முறியடிக்க வேண்டும்.

இதனடிப்படையில், அனைத்து தரைக்கடை வியாபாரி கள் சங்கத்தினர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு மக்களிடம் விநியோகித்து ''தரைக்கடைகள் போட அனுமதி கோரியும், பெருந் துணிக் கடைகள் அருகே சட்ட விரோதமாக கார்களை நிறுத்த அனுமதிக்கும் போலீசையும் மாநகராட்சி அதிகாரிக ளையும் கண்டித்தும்'' குடும்பத்தோடு நூற்றுக்கணக்கான வியாபாரிகள் 17.10.05 அன்று மாலை திருச்சி அண் ணாசிலை அருகே எழுச்சி மிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தி னர். தமது வாழ்வுரிமைக்கா கத் தொடர்ந்து போராடிவரும் இச்சங்கத்தினர் உழைக்கும் மக்களின் ஆதரவுடன் அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.




**தகவல்: அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்கம், திருச்சி.**

www.padippakam.com

## பாரதீயம், சாதியம், இனவாதம், திரிபுவாதம்

# த.தே.பொ.க.வின் கலக்கல் தயாரிப்பு

துரத்தி வரும் கூட்டத்தைத் திசைதிருப்பித் தப்பித்துக் கொள்ளும் முயற்சியாக திருடன் கடைப்பிடிக்கும் பிரபல மான தந்திரம், ''திருடன், திருடன்! அதோ திருடன்! ஓடறான், விடாதீங்க, பிடிங்க, பிடிங்க!'' என்று கூச்சல் போட்டுக் கொண்டே ஓடுவானாம்.

அதைப் போன்று, த.தே.பொ.க. என்ற பெயரில் உள்ள மணியரசன் கும்பல் தானே ஒரு பார்ப்பனப் பாதந்தாங்கி யாக இருந்து கொண்டு, ம.க.இ.க. முதலிய புதிய ஜனநாய கப் புரட்சி அமைப்புகளைப் பார்த்து ''மறைமுகப் பார்ப்பனி யம்'' என்று கூச்சல் போடுகிறது. அக்கும்பலோடு சேர்ந்து அதன் பங்காளிகளும் கூட்டு ஒப்பாரி வைக்கின்றனர்.

இந்தத் த.தே.பொ.க. வெறுமனே ஒரு பார்ப்பன பாதந் தாங்கிகள் கட்சி அல்ல. பாசிச பார்ப்பன பாதந்தாங்கிகள்; அதனால்தான் தனது பங்காளிகள் அல்லாதவர்கள் எல்லாம் பகையாளிகள் என்கிறவாறு தனது தன்னுரிமைக்கு முன்னு ரிமை அளிக்காதவர்கள் எல்லாம் ''அகில இந்தியத்தை ஏற் கும் பூணூலிஸ்டுகள்தாம்'' என்று கோயபல்சு பாணியில் கூட்டு ஒப்பாரி வைக்கிறார்கள்.

நம்பூதிரிபாடு பள்ளியில் தத்துவமும் தர்க்கமும் பயின்ற வர்கள் அல்லவா! அதுதான் எதிராளியின் நிலைப்பாடுகள் என்னவோ அதன் மீது வாதங்கள் வைப்பதற்கு பதில், அதற் குத் தாமே ஒரு வியாக்கியானம் கொடுத்து, அதன் அடிப்ப டையில் வாதங்களை அடுக்குகிறார்கள்!

**வியாக்கியானத்தின் மீது விமர்சனம்: நம்பூதிரித்தனம்!**

ஒரு நாட்டு அரசின் கீழ் ஒடுக்கப்பட்டிருக்கும் அனைத்து தேசிய இனங்களுக்குமான விடுதலை - புரட்சி என்று திட்டம் வைத்துக் கொண்டிருந்தாலே, அது தனித்தனி தேசிய இனங்க ளுக்கு எதிரானது என்று வியாக்கியானம் செய்து கொண்டு, நாம் ''அகில இந்தியத்தை ஏற்பவர்கள்'' என்று முடிவு செய்து எகிறுகிறார்கள். அனைத்து இந்தியா என்றாலே ஆர்.எஸ்.எஸ். - காங்கிரசு பேசும் இந்திய தேசியம்தான் என்று மேலும் ஒரு கருத்தை இட்டுக் கட்டி ''அகில இந்திய தேசிய பூணூலிஸ்டுகள்'' என்று அவதூறும் செய்கிறார்கள்.

அதேசமயம் இந்திய தேசியத்தை ஏற்கும் வைகோ முதல் ஜார்ஜ் பெர்னான்டஸ் வரையிலானவர்கள் இவர்கள் கண் ணோட்டப்படி பூணூல் ''லிஸ்டில்'' வரவில்லை; இவர்களின் தோழர்கள் ''லிஸ்டில்'' வருகிறார்கள்.

அதே நம்பூதிரித்தனத்தை ஈழப் பிரச்சினையில் எமது நிலைகுறித்த விசயத்திலும் பிரயோகித்திருக்கிறது, மணியர சன் கும்பல். ஈழப்பிரச்சினையில், ஈழவிடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை, அதையும் அதன் தலைவர் பிரபாகரனை யும் பாசிஸ்டுகள் என்று ம.க.இ.க.வும் பிற புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகளும் கருதுகின்றன; இந்த நிலைக்கான அடிப்படையைப் பலமுறை விளக்கியும் எமது நிலையை திரித்துப் புரட்டி வியாக்கியானம் செய்து நாம் ஈழ விடுதலைக்கு எதிரானவர்கள்; எமது நிலையும் சோ முதலிய பாசிசப் பிற்போக்காளர்களின் நிலையும் ஒன்றுதாம் என்று அவதூறு செய்கிறார்கள்.

முன்பு ''தனி ஈழம்தான் ஒரே தீர்வு'' என்று தீர்க்கமாக வரையறுத்துச் சொன்ன மணியரசன் கும்பல் மற்றும் அதன் பங்காளிகள் இப்போது அது குறித்தும், உலகமயமாக்கலை யும், அமெரிக்க மேலாதிக்கத்தையும் ஏற்று, தன்னுரிமைக் குப் புதுவிளக்கம் தரும் ஈழவிடுதலைப் புலிகளின் நிலை குறித்தும் மேல்வாயையும் கீழ்வாயையும் மூடிக் கொண்டி ருக்கிறார்கள்.

**இதற்குப் பெரியார் வழி; அதற்கு நேரு வழியா?**

ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் ''மறை முகப் பார்ப்பனியம்'' என்று ஆத்திரம் பொங்க மணியரசன் கும்பலும் அதன் பங்காளிகளும் அவதூறு செய்வதற்கான இன்னொரு காரணமாக, நாம் ''பெரியாரின் உயிர் மூச்சான இடஒதுக்கீடு கொள்கையை எதிர்க்கிறோம்'' என்ற இட்டுக் கட்டுதலைக் கூறுகிறார்கள்.

''பிற்பட்ட சாதிகளுக்கான இடஒதுக்கீடு'' என்ற ஏற்பாடு உண்மையில் சமூக ரீதியிலும், கல்வி ரீதியிலும் ஒடுக்கப்ப டும் சாதிகளுக்குப் பயன்படும் சமூக நீதியாக இல்லை. அவ் வாறான ஒடுக்குமுறை செலுத்தும் சில ஆதிக்க சாதிகளுக்குத் தான் பயன்படுத்துவதாக உள்ளது. ஆதிக்க சாதிகள் தாமே ஒடுக்கப்பட்டவர்களாக காட்டிக் கொண்டு சமூக நீதிக்கான உரிமை கோருவதும், போட்டியிடுவதும், வெற்றி பெறுவ தும் நடக்கிறது. சமூக - சாதி ஒடுக்குமுறையில் ஈடுபடும் ஆதிக்க சாதிகள் எதுவானாலும் அவற்றுக்கு இடஒதுக்கீடு முதலிய சமூக நீதிச் சலுகைகள் மறுக்கப்பட வேண்டும்.''

''வருணாசிரம வரைமுறைக்கும் இன்றைய சாதிய அமைப்பு முறைக்கும் உள்ள சமூக, வரலாற்று உறவை, சமூக நீதிக் கோட்பாட்டாளர்களான பெரியாரும் அம்பேத்கரும் கூட வரையறுக்கவில்லை. மேலும், இடஒதுக்கீடு என்பது ஆளும் வர்க்கத்தால் அமலாக்கப்படும் ஒரு சீர்திருத்தம்; ஆகவே, பொதுவில் அதை நாம் எதிர்க்கவும் இல்லை; ஆத ரிக்கவும் இல்லை. அதேசமயம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங் குடி மக்கள், சேவை சாதிகள் போன்ற உண்மையில் ஒடுக்கப் பட்டுவரும் சாதிகளுக்கான இடஒதுக்கீடுகளை ஒரு சீர்திருத் தம், சலுகை என்ற முறையில் நாம் ஆதரிக்கிறோம்'' - இவ் வாறான ம.க.இ.க. மற்றும் இதன் தோழமை அமைப்புகளின் நிலைப்பாடுகள் பலமுறை விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலைப்பாடுகளுக்கு தகுந்த மறுப்பு எதுவும் இது வரை தராத மணியரசன் கும்பல் மற்றும் அதன் பங்காளிகள் அவர்களது சொந்தத் திரிபு அடிப்படையில் நமது நிலை ''ம றைமுக பார்ப்பனியம்'' என்று புளுகித் திரிகிறார்கள்.

சாதியத்தைப் பாதுகாப்பதில் மணியரசன் கும்பலுக் குள்ள பற்றுதலைப் பாருங்கள்! சாதியத்தை ஒழிப்பதை ஒரு

www.padippakam.com

அங்கமாகக் கொண்ட போராட்டத்தினூடாகத்தான் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்று நாம் கருதுகிறோம். அதை மறுக்கும் மணியரசன் கும்பல், தன்னுரிமையாளர்கள் ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடமே சாதிகள் ஒழிந்து விடாது, தமது ஆட்சியிலும் இடஒதுக்கீடு தொடரும் என்று கூறுகிறது. தன்னுரிமை ஆட்சி அமைவதற்கான போராட்டத்தின் ஒரு அங்கமாக சாதிய ஒழிப்பு இல்லை; அதன்பிறகும் சாதியத்தை கடைப்பிடிப்பது தண்டனைக்குரிய அரசியல், சமூக விரோதச் செயல் என்று கருதப்பட மாட்டாது என்கிறது மணியரசன் கும்பல். அவ்வாறு கருதப்படும் என்றால் இடஒதுக்கீடு நீடிக்க வேண்டிய அவசியமென்ன? மேலும், இடஒதுக்கீடு நீடிக்கும் என்றால் சாதிய அடையாளமும் தேவை, நீடிக்கும் என்று தானே பொருள்? இந்த அடையாளத்தை வைத்துத்தானே சமூக ரீதியிலான இடஒதுக்கீட்டை அமலாக்க முடியும்?




மார்வாடி - குஜராத்தி சேட்டுகளை எதிர்க்கும் தமிழ் முதலாளிகளைத் தேடி...

பெரியாரின் உயிர் மூச்சு என்று அவர்கள் குறிப்பிடும் இடஒதுக்கீடு / சமூக நீதி விசயத்திலேயே இரட்டை நாடகமாடுகிறார்கள். நாடாளுமன்றம், சட்டமன்றம் போன்ற அமைப்புகளில் பங்கேற்காமல் புறக்கணிக்கிறது, மணியரசன் கும்பல். அதற்கான காரணமாக, காலனிய ஆட்சிக் காலத்தில் முதலில் காந்தியும் காங்கிரசும் பின்பற்றிய கொள்கை, பிறகு சவகர்லால் நேரு முன்வைத்த புறக்கணிப்பு வாதங்களை அடுக்குகிறது. ''அடிமை கொண்ட அரசு நடத்தும் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும்'' என்று தேசிய விடுதலைப் போராட்டம் நடத்துவோர்க்கு காந்தி - நேரு காங்கிரசு கற்றுக் கொடுத்த பாடத்தின் அடிப்படையில், இப்போது ஆதிக்கம் செலுத்தும் தில்லி அரசு நடத்தும் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்கிறது மணியரசன் கும்பல்.

ஆனால், அதே ஆதிக்கம் செலுத்தும் - ஆளும் வர்க்கங்களால் உருவாக்கப்பட்டு அவர்களின் நலன்களுக்காக இயங்கி வரும் அரசு எந்திரத்தில் பங்கேற்கும் இடஒதுக்கீட்டை மணியரசன் கும்பல் எதிர்க்கவோ, புறக்கணிக்கவோ இல்லை. நாடாளுமன்றம், சட்டமன்றம் போன்ற அமைப்புகளில் பங்கேற்பதை விட மிக மோசமானது அவர்களின் அரசு எந்திரத்தில் பங்கேற்று அவர்களுக்குச் சேவை செய்வதாகும். இது நம்பூதிரிபாடின் சீடர்களும், அரசியல் தத்துவ ஆராய்ச்சியாளர்களுமான மணியரசன் கும்பலுக்குத் தெரியவில்லையா?

அரசு எந்திரத்திற்கான இடஒதுக்கீட்டில் பங்கேற்பதற்கு பெரியாரின் உயிர்மூச்சான சமூக நீதித் தத்துவத்தையும், நாடாளுமன்ற - சட்டமன்றப் புறக்கணிப்புக்குப் பண்டித நேருவின் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதே

**அரசு எந்திரத்திற்கான இட ஒதுக்கீட்டில் பங்கேற்பதற்கு பெரியாரின் உயிர்மூச்சான சமூக நீதித் தத்துவத்தையும், நாடாளுமன்ற – சட்டமன்றப் புறக்கணிப்புக்குப் பண்டித நேருவின் கொள்கையையும் த.தே.பொ.க.வினர் அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள்.**

ஒரு வேடிக்கை. தாமே பங்கேற்காது புறக்கணிக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற அமைப்புகளில் பெண்களுக்காக இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று உரிமைக் குரல் எழுப்புவது மேலும் ஒரு வேடிக்கை.

நாடாளுமன்ற, சட்டமன்ற அமைப்புகளில் ''சமூக நீதி உரிமை'' வழங்கப்பட்டிருப்பினும் அது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்குத்தான், ''தமது சாதிகளுக்கு'' இல்லை என்பதால்தான் பங்கேற்காது புறக்கணிக்கிறார்களோ என்ற சந்தேகத்துக்கு இடமிருக்கிறது என்பதை அவர்கள் மறுக்க முடியாது.

உண்மை என்னவென்றால், நாடாளுமன்ற - சட்டமன்ற அமைப்புகளை மணியரசன் கும்பல் புறக்கணிப்பதற்கு காரணம் ''சீ... சீ... இந்தப் பழம் புளிக்கும்'' என்ற நரிக்கதைதான். தனிக்கட்சி துவங்கியபின் தமிழ்நாட்டின் இரண்டு முதன்மைக் கூட்டணிகளாலும் கழித்துக் கட்டப்பட்ட ராமதாசு, அப்துல் சமது போன்றவர்களின் கட்சிகளுடன் சேர்ந்து ''மூன்றாவது அணி - இதுதான் கொள்கைக் கூட்டணி'' என்று பிரகடனம் செய்து தேர்தல்களில் போட்டியிட்டது, மணியரசன் கும்பல். காப்புத் தொகை இழந்து படுதோல்வி கண்டபிறகு, ராமதாசின் சந்தர்ப்பவாத அரசியல் அம்பலமான பிறகு, ''பூனை வெளியே வந்துவிட்டது'' என்று எழுதியது. ராமதாசு தானே தன் கொள்கை வேடத்தைக் கலைத்த பிறகுதான், அவருக்குள் ''பூனை'' பதுங்கியிருப்பதைக் கண்டுபிடித்தது.

இங்கிருந்து ஈழம் வரை 'புதைபொருள் அகழ்வாராய்ச்சி' நடத்தும் இந்தத் தத்துவ வித்தகர்களுக்கு ஒரு கட்சி, அதன் தலைவர் பற்றி சரியான மதிப்பீடு செய்யக் கூடவா தெரியவில்லை! ஜெயலலிதாவை ஆதரித்து ஆட்சி பீடமேற்றிய பிறகு, ''அவர் அப்படிச் சொன்னார், நம்பி விட்டோம்; இப்போது மாறிவிட்டார்'' என்று கதைக்கும் போலி கம்யூனிஸ்டுகளுக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு? பெரும்பாலும் வேறுபாடு எதுவும் பெரிதாகக் கிடையாது என்பதுதான் உண்மை! குறிப்பாக, பொதுவுடைமைச் சித்தாந்தத்தை நிராகரிப்பது, பார்ப்பனியத்துக்கு சேவை செய்வது என்பதில் வேறுபாடு எதுவும் கிடையாது.

**மணியரசன் கும்பலின் பாரதீயம்**

பார்ப்பன சனாதன - வருணாசிரம தர்மம்தான் இந்துமதம். இந்துத்துவம் என்பது அதன் நவீன கால அரசியல், சித்தாந்த, பண்பாட்டு அவதாரம். இந்து மதத்தை அழிக்காமல், இந்துத்துவத்தை முறியடிக்காமல் பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதியத்தை ஒழிக்க முடியாது. பெரியார் - அம்பேத்கார் போன்றவர்களின் கருத்தும் இதுதான்.

ஆனால், மணியரசன் மற்றும்

www.padippakam.com

போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிலை என்ன? "இந்துமதம் என்பது வேறு, இந்துத்துவம் என்பது வேறு, பார்ப்பனிய வருணாசிரம தர்மம் என்பது வேறு. இந்து மதம் என்பது மக்களின் கடவுள் நம்பிக்கை, இதை இப்போதைக்கு அழிக்க முடியாது; அதற்கான அவசியமில்லை" என்பதுதான்.

இந்து மதத்தை எதிர்த்து அழிக்க வேண்டிய அவசியத்தை ஏற்காத மணியரசன் கும்பல் "பார்ப்பனியத்தையும்", "இந்துத்துவாவையும்" எதிர்க்கிறதாம்! என்னவொரு பித்தலாட்டம்!

**"இந்து மதம் என்பது வேறு, இந்துத்துவம் என்பது வேறு, பார்ப்பனிய வருணாசிரம தர்மம் என்பது வேறு. இந்து மதம் என்பது மக்களின் கடவுள் நம்பிக்கை, இதை இப்போதைக்கு அழிக்க முடியாது; அதற்கான அவசியமில்லை" என்கிற மணியரசன் கும்பல் "பார்ப்பனியத்தையும்", "இந்துத்துவாவையும்" எதிர்க்கிறதாம்! என்னவொரு பித்தலாட்டம்!**

"இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள்!" என்று பெரியாரும் அம்பேத்கரும் அறைகூவல் விட்டது குறித்து மவுனம் சாதிக்கும் மணியரசன் கும்பலுக்கு ம.க.இ.க.வும் இதன் தோழமை அமைப்புகளும் அவ்வாறு கூறினால் மட்டும் "மறைமுகப் பார்ப்பனியம்" என்று தெரிகிறது. இந்துமதத்தை விட்டு வெளியேறினால் இடஒதுக்கீட்டால் பலன் பெறும் வாய்ப்பு பறிபோய் விடுமாம். இடஒதுக்கீடு / சமூக நீதி கொள்கையின் நாயகர்களான பெரியாரும் அம்பேத்கருக்கும் இது தெரியாதா? இந்து மதத்தையும், இட ஒதுக்கீட்டுப் பலனையும் காப்பதில் இவர்களுக்கு எவ்வளவு அக்கறை!

ம.க.இ.க.வையும், அதன் தோழமை அமைப்புகளையும் இந்திய தேசியத்தை ஏற்பவர்கள், மறைமுகப் பார்ப்பனியம் என்று அவதூறு பேசும் மணியரசன் கும்பலுக்கு பாரதீயத்தை ஏற்றிப் போற்றும் சுப்ரமணிய பாரதி, பார்ப்பன சனாதன தர்மத்தை ஏற்கும் திலகரையும், இந்துத்துவத்தின் பிதாமகனான சாவர்க்கரையும் கொண்டாடிய பாரதி, சாதிகளை எதிர்ப்பதாகக் கவிதை எழுதிவிட்டு நடைமுறையில் வருணாசிரமத்தையும் சாதியத்தையும் தாங்கிப் பிடித்த சுப்ரமணிய பாரதி "முற்போக்குக் கவிஞராகத்" தெரிகிறார்.

**சி.பி.எம்.முடன்**
**தொப்புள் கொடி உறவு!**

தமிழ்தேசியப் பொதுவுடைமைக் கட்சி என்று பெயர் வைத்துக் கொண்டு பொதுவுடைமை சித்தாந்தத்துக்குக் குழி பறிப்பதில் தமது தாய்க் கட்சி வழியில் நடக்கிறது மணியரசன் கும்பல். சோவியத் ஒன்றியத்தில் 1950-களிலேயே குருச்சேவ் காலத்திலேயே பாட்டாளி வர்க்கக் கட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை அதிகாரபூர்வமாகவே கைவிடப்பட்டு, முதலாளியம் நிலைநாட்டப்பட்டு விட்டது. சீனத்தில் 1970-களிலேயே, டெங்சியாவோ பெங் காலத்திலேயே அதிகாரபூர்வமற்றவாறு நடந்தது. ஆனால், "அதெல்லாம் கிடையாது. கோர்பச்சேவ் காலம் முடிய சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோசலிசமும் நிலவியது; சீனத்தில் தற்போதும் சோசலிச ஆட்சிதான் நடக்கிறது" என்று சி.பி.எம். கட்சி வாதாடி வருகின்றது. இதுதான் மணியரசன் கும்பலின் நிலை.

சோவியத் ஒன்றியத்தில் சோசலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுக்குக்கான முக்கிய காரணம் அங்கு நிலவிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தான் என்று கண்டுபிடித்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற இலட்சியத்தைக் கைவிட்டு பல வர்க்க, பல கட்சி நாடாளுமன்ற அமைப்புதான் சிறந்தது என்ற முடிவுக்கும் வந்தது. சி.பி.எம் கட்சி. பல வர்க்க, பல கட்சி நாடாளுமன்ற அமைப்பில் தொழிலாளர் வர்க்க, மற்றும் கம்யூனிசக் கட்சி தலைமையில் ஆட்சி அமைப்பதுதான் தனது இலட்சியம் என்று திட்டம் வகுத்துக் கொண்டது. அதேபோல சோசலிசப் பொருளாதாரத்துக்குப் பதில் கலப்புப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவதுதான் அதன் நோக்கம் என்று வகுத்துக் கொண்டுள்ளது. இதன் பொருள், தற்போதைய அரசியல் பொருளாதார அமைப்பையே தொழிலாளர் வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையில் பாதுகாப்பார்கள். போலி கம்யூனிஸ்டுகளின் இத்திட்டத்தை ஒரே ஒரு வேறுபாட்டுடன் மணியரசன் கும்பல் ஏற்கிறது. அதாவது, தமிழ் தேசிய இனத்துக்கு மட்டும் மேற்படி அரசியல், பொருளாதார அமைப்பைப் படைப்பதுதான் இவர்களின் திட்டமாக உள்ளது. சி.பி.எம். கட்சி நாடு முழுவதற்குமாக இதைச் செய்யும்.

சர்வதேச மதிப்பீடுகள் - உறவுகளிலும், ஈழ விடுதலைப் புலிகளை மணியரசன் கும்பல் ஆதரிக்கிறது, சி.பி.எம் ஆதரிக்கவில்லை என்ற ஒரு வேறுபாடு தவிர வேறெந்த வேறுபாடும் கிடையாது. உலகின் திரிபுவாதக் கட்சிகளையெல்லாம் கம்யூனிச கட்சிகள் என்று சி.பி.எம். கட்சி ஏற்பதைப் போலவே மணியரசன் கும்பல் செய்கிறது. இரு தரப்புமே முனை மழுங்கிய அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புக் காட்டுகின்றனர். சோவியத் ஒன்றியத்தின் பின்னடைவுக்கான காரணங்கள், அதற்கான அரசியல், சித்தாந்த அடிப்படைகள் குறித்த ஒரே கணிப்புகளைக் கொண்டிருக்கின்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிடுவதுதான் சரியான நிலை என்று கருதினாலும், அவ்வாறு செய்யாத சீனா, வட கொரியா, வியத்நாம் மற்றும் கியூபாவை எவ்வித விமர்சனமின்றி சோசலிச நாடுகள் என்று கொண்டாடுகின்றனர்; குறிப்பாக சீனாவில் கொண்டு வரப்படும் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கலை நியாயப்படுத்துகின்றனர். இவற்றிலெல்லாம் சி.பி.எம். கட்சியே மணியரசன் கும்பலின் வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் விளங்குகிறது. பத்துக்கு ஒன்பது பங்கு தாய்க் கட்சியின் வழியில் நடக்கிறது மணியரசன் கும்பல். எஞ்சிய ஒரு பங்கு அதன்நிலை முரண்பாடுகள் நிறைந்ததாகவே இருக்கிறது.

**முற்போக்கு சாயம் பூசிய இனவாதம்!**

தன்னுரிமைக்கு முன்னுரிமை தரும் புரட்சிப் போர்க்களத்தில் 1998 ஜூன் - ஜூலை காலத்தில் மார்வாடி குஜராத்தி சேட்டுக்களைத் தமிழகத்தில் இருந்து வெளியேற்றுவோம் என்று முழங்கி "தமிழகம் தழுவிய அளவில் பல போர்க்குணமிக்க போராட்டங்களையும் மாநாட்டையும்" நடத்தினர். அடுத்து 2003 ஆக-செப் காலத்தில், "தமிழகத்தில் தொழில் - வணிகம் தொடங்கும் அயல் இனத்தார் (வெளிநாட்டினர், வெளி மாநிலத்தவர்) தங்கள் நிறுவனத்தில் 33% மூலதனப் பங்காளிகளாகத் தமிழர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து மீண்டும் "தமிழகம் தழுவிய அளவில் பல போர்க்குணமிக்க போராட்டங்களையும் மாநாட்டையும்" நடத்தினர்.

1998-இல் யாரை வெளியேற்றுவோம் என்று முழங்கி

www.padippakam.com

னார்களோ அவர்களையும் உள்ளடக்கிய அயல் இனத்தார்கள், தமிழர்களுக்கு 33 சதவீதம் மூலதனப் பங்களித்தால் வெளியேறத் தேவையில்லை என்று 2003-இல் முடிவு செய்கிறார்கள். முன்னது அடிப்படைக் கோரிக்கை, பின்னது ''இடைக்காலக் கோரிக்கை, உடனடி எதிர்காலத்தில் சாதிக்கக் கூடியது, சட்டவகையில் அரசால் புறக்கணிக்க முடியாதது, அடிப்படை இலக்கு நோக்கி மக்களைத் திரட்டப் பயன்படக் கூடியது'' என்று விளக்கமளித்தனர். ஆனால், இப்படி எதுவும் நடக்கவே இல்லை என்பதுதான் உண்மை.

**ம.க.இ.க.வை மறைமுகப் பார்ப்பனியம் என்று அவதூறு பேசும் மணியரசன் கும்பலுக்கு, பாரதீயத்தை ஏற்றிப் போற்றிய, பார்ப்பன சனாதன தர்மத்தை ஏற்ற திலகரையும், இந்துத்துவத்தின் பிதாமகனான சாவர்க்கரையும் கொண்டாடிய, வருணாசிரமத்தையும் சாதியத்தையும் தாங்கிப் பிடித்த சுப்ரமணிய பாரதி ''முற்போக்கு கவிஞராக''த் தெரிகிறார்.**

தமிழர் இனவிடுதலை பேசிக் கொண்டே, தமிழர்களில் சிலரை தரகு முதலாளிகளாக்கும் முனைப்பைக் காட்டுகிறார்கள். தமிழர்கள் ஏதோ மூலதனத்தைக் குவித்து வைத்துக் கொண்டு, அயல் இனத்தார் தொடங்கும் தொழில் - வணிக நிறுவனங்களில் முதலீடு செய்ய முடியாமல் தவிப்பது போலவும் உளறுகிறார்கள்.

2003-இல் மணியரசன் கும்பலும் அவர்களின் பங்காளிகளும் செய்த கணிப்பு சற்றும் நகராத அதேசமயம் 2005-இல் தமது அடிப்படை முழக்கத்தையே விரிவுபடுத்தி, மார்வாடி - குஜராத்தி சேட்டுகள், மலையாளிகள், வடநாட்டவர் போன்ற வெளியாரை வெளியேற்றும் முழக்கத்தை முன்வைத்து பரப்புரையும் மாநாடும் நடத்தினர். 2003-இல் எழுப்பிய உடனடிக் கோரிக்கை, உடனடி முழக்கம் எந்த அளவு நிறைவேறியது என்பது பற்றி மூச்சுப் பேச்சுக் கிடையாது. பஞ்சாபில் காலிஸ்தானிகள், அசாமில் கனபரிசத்தினர், மராட்டியத்தில் சிவசேனர்கள் அடைந்த திடீர் பிரபலம் போல ''வெளியாரை வெளியேற்றுவோம்'' என்ற முழக்கத்தின் மூலம் சாதித்து விடலாம் என்று மணியரசன் கும்பல் எத்தணிக்கிறது. இது குறுக்கு வழிகளால் பிரபலமடைவது என்ற பிரபலமான திராவிட, தமிழினவாதிகளின் வழக்கமான உத்திதான்.

அசாமிலும், மராட்டியத்திலும் வெளியாரை வெளியேற்றுவதை ஆர்.எஸ்.எஸ். ஆதரித்தது. மேலும் இசுலாமியர்களை வெளியேற்றுவதற்கு ஆர்.எஸ்.எஸ். கும்பல் முன்வைக்கும் வாதத்தைப் போலவே அயல் இனத்தார்க்கு எதிராக மணியரசன் கும்பல் முன்வைக்கிறது. தமிழர்களின் தாயகத்தையும் தமிழர்களின் மக்கள் தொகை விகிதத்தையும் தமிழ் பண்பாட்டு அடையாளத்தையும் சிதைக்கும் வகையில் ''அயல் இனத்தார் வந்தால் வெளியேற்றுவோம்'' என்கிறது.

ஆனால், உண்மையில் தமிழர்களின் மக்கள் தொகை விகிதம் இப்போது துதான் மாறிவருகிறதா? ஏற்கெனவே சிக்கலாக உள்ளது. தமிழ் மண்ணில் நீண்டகாலமாக வாழ்ந்து முழு வாழ்வுரிமை பெறத் தகுதி உடையவர்களாக மணியரசன் கும்பல் ஏற்கும் தெலுங்கு மொழி பேசும் மக்கள், தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் வகையில் தமிழ் நாட்டின் கணிசமான தொகுதிகளில் உள்ளனர். திராவிட, தமிழ் இனவாத அரசியல் அமைப்புகளில் பொறுப்புகளிலும் உள்ளனர்.

இந்த உண்மைகளை மறந்துவிட்டு / மறைத்துவிட்டு எதையாவது பேசி, எழுதி மாபெரும் சிந்தனையாளர்கள் / ஆய்வாளர்கள் / மேதைகளாகக் காட்டிக் கொள்கிறது, மணியரசன் கும்பல். அவர்கள் எந்த அளவு உண்மை பேசுபவர்கள் என்பதற்கு இங்கே ஒரு வகை மாதிரியைத் தருகிறோம். அதிலிருந்து வாசகர்களே முடிவு செய்து கொள்ளலாம்.

*''சொந்தச் சரக்கில்லாதவர்கள் அடுத்தவர் சரக்கைக் குறை கூறிக் கொண்டே இருப்பார்கள். சொந்தமாகச் சோறு போட முடியாதவர்கள் கல்யாண விட்டில் பிள்ளை வளர்க்க முயல்வார்கள். இந்த வகையைச் சேர்ந்தவர்கள்தாம் ம.க.இ.க.வினர், த.நா.மா.லெ.க.வினர். இவர்களது அரசியல் திட்டங்களின் வெறுமையை அக்குவேறு ஆணி வேறாகத் திறனாய்வு செய்து தமிழர் கண்ணோட்டத்தில் எழுதியுள்ளோம். அவற்றுக்கு இதுவரை அவர்கள் விடையளிக்கவில்லை.*

*இவர்கள் சந்துமுனைச் சிந்து பாடிகள்; சாலையோர விமர்சகர்கள். கோள்மூட்டும் குசுகுசுப் பேர்வழிகள். சொல்லிக் கொள்வதற்கு சொந்த வேலைத் திட்டம் இல்லாதவர்கள். அடுத்தவர்களை 'அம்பலப்படுத்துவதாக'க் கூறி அரசியல் பிழைப்பு நடத்துகிறார்கள்''.*

*— தமிழர் கண்ணோட்டம், பக். 28, ஜுன் 2005.*

● ஆர்.கே.

## 21-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

இந்த இதழிலிருந்து புதிய ஜனநாயகம் 21-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

கடந்த இருபதாண்டுகளில் நாட்டின் அரசியல் - பொருளாதார அரங்கிலும் அரசியல் போக்குகளிலும் ஏராளமான மாற்றங்கள் நடந்தேறியுள்ளன. இம்மாற்றங்களையும் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளையும் பகுத்தாய்ந்து, ஆளும் வர்க்க அரசியலையும், சந்தர்ப்பவாதிகளின் சதிராட்டங்களையும் தோலுரித்து, புரட்சிகர மாற்று வழியை - மக்கள் திரள் வழியை முன்வைத்து புதிய ஜனநாயகம் சளையாமல் போராடி வந்துள்ளது. வாசகர்கள் தமது உணர்வில், அனுபவத்தைப் பெற்றுப் போராடுவதற்கான அரசியல் ஆயுதத்தை இந்த 20 ஆண்டுகளில் புதிய ஜனநாயகம் மேலும் கூர்மைப்படுத்தி வந்திருக்கிறது. வெறும் கருத்துப் பிரச்சாரம் என்பதாக அல்லாமல், புரட்சிக்கான அமைப்பாளனாக உருவெடுத்திருக்கிறது. வாசகர்களும், வெறும் வாசகர்களாக இல்லாமல், புரட்சிக்காகச் செயல்படும் நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள்.

இந்தப் புரட்சிகர பயணத்தைச் சாத்தியப்படுத்திய வாசகத் தோழர்களுக்கு எமது நன்றியையும் புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களது உறுதியான ஆதரவுடன், நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும் இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற உறுதியேற்று, 21-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் புரட்சிநாள் வாழ்த்துக்கள்!

— ஆசிரியர் குழு

www.padippakam.com

# ஜெயா – கராத்தே விவகாரம்:
# மர்ம ஆட்சியின் கூத்து!

''கராத்தே'' தியாகராஜன் - சென்னை மாநகர மேயர் பொறுப்பில் இருக்கும் துணை மேயர் ஏறக்குறைய ஒருமாத காலம் தலைமறைவாக இருக்கிறார். திருவனந்தபுரம், பெங்களூர், மும்பை, தில்லி என்று ஓடிக் கொண்டிருக்கிறார். செய்தியாளர்களிடம் அன்றாடம் தொலைபேசியில் பேட்டி அளித்துக் கொண்டிருக்கிறார். சென்னையில் தனக்கு வேலை எதுவும் இல்லாததால் கிளம்பி வந்து விட்டதாகக் கூறுகிறார்.

சென்னை நகரமே சமீபத்திய புயல் - மழையால் வெள்ளத்தில் மிதக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள் நகராட்சி பள்ளிகள், சத்திரங்கள், சமூகக் கூடங்களில் குவிந்துள்ளனர். சோறு - தண்ணீர் கிடையாது; சாலைகள் உடைந்து போய்க் கிடக்கின்றன. தொற்று நோய்கள் வெடித்து மருத்துவ சிகிச்சை தேவைப்படுகிறது. இதையெல்லாம் ''கவனிக்க'' வேண்டிய பொறுப்பு மேயர் நகருக்குத் திரும்பவில்லை. அங்கு தனக்கு வேலை இல்லை என்கிறார்.

ஆனாலும், வரிவசூல், ஒப்பந்த வேலைகள் போன்ற வழக்கமான மாநகராட்சிப் பணிகள் நடக்கின்றன. வெள்ள நிவாரணம் என்ற பெயரிலான (அதிலும் சுருட்டுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால்) பணிகள் நடக்கின்றன. ''கராத்தே'' தியாகராஜன் மற்றும் நேற்று வரை அவரது ''தெய்வத்தாயும் புரட்சித்தலைவியுமான அம்மா'' அவர்களின் புண்ணியத்தால் இப்போது நாட்டு மக்களுக்கு ஒரு உண்மை புலனாகிறது. மேயரோ, துணைமேயரோ, கவுன்சிலரோ இல்லாமலேயே, அதிகாரிகள், அலுவலர்கள் ஊழியர்களைக் கொண்ட மாநகராட்சி எந்திரம் இயங்கிக் கொண்டே இருக்கும். தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் தேவையே இல்லை. சென்னை மாநகராட்சி உட்பட உள்ளூராட்சி அமைப்புகள் பலவும், பல பத்தாண்டுகள் தேர்தல்கள் இன்றியே அதன் பெயரால் நிர்வாக பணிகள் நடந்தே வந்திருக்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், ''வசூல் வேட்டை'' தவிர என்ன வேலை செய்தார்கள்? அவைக் கூட்டங்கள் எப்படி நடந்தன? குறிப்பாக, ''கராத்தே'' தியாகராஜன், வெற்றிவேல் ஆகிய தளபதிகள் (அரசியலில் இதன் பொருள் பொறுக்கி அரசியல் தலைவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்) முன்னிலை வகித்த போதெல்லாம் எதிர்த்தரப்பினரைத் தாக்கிக் குண்டுக்கட்டாக வெளியே தூக்கி வீசினார்கள். பிறகு ஆளும் தரப்பினர், ''புரட்சித்தலைவி அம்மா வாழ்க'' என்ற கூச்சல் போட எல்லாத் தீர்மானங்களும் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

அவையை நடத்துவதில் மட்டுமல்ல, தேர்தல்களை எதிர் கொள்வதிலும் ''அம்மா'' வழியிலே போராடி பல வெற்றிக் கனிகளைப் பறித்து அவரது காலடியில் சமர்ப்பித்து எண்சாண் கிடையாகப் படுத்துக் கும்பிட்டு வந்த ''கராத்தே'' தியாராஜன், அவரது நம்பிக்கை இழந்துவிட்டதற்கு என்ன காரணமென்று அறிய, தமிழகமே தவிக்கிறது! அதேபோல, சென்னை மாநகர ஆட்சியைப் பிடிப்பதற்கு பாலகங்கா, சேகர்பாபு, ஆதிராஜாராம், வெற்றிவேல், ஜெயகுமார், ''கராத்தே'' தியாகராஜன் ஆகிய புரட்சித் தளபதிகள் வைத்துக் கொண்டு 'அம்மா' ஜெயலலிதா என்ன பாடுபட்டார், பறிதவித்தார் என்பது பலருக்கும் தெரியும். அப்படியும், கருணாநிதி - ஸ்டாலின் குடும்ப விசுவாசிகளிடம் சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மாநகர ஆட்சி கை நழுவிப் போய்விட்டது.



அதன் பிறகு, என்னென்னவோ ''சட்டபூர்வ'' தகிடுதித்தங்கள் செய்து ஸ்டாலினை விரட்டிவிட்டு, மாநகர மேயர் பொறுப்பைக் கைப்பற்றி தனது வளர்ப்புப் பிராணியை ஒத்த ''கராத்தே'' தியாகராஜனை பிடித்துப் போட்டு அப்பதவியை அலங்கரித்து அம்மா இரசித்தார். அவரும் விசுவாசமாக இருந்து ''எவ்வளவோ'' காரியங்களைச் சாதித்துக் கொடுத்தார். தேனெடுத்தவனுக்கு எச்சில் எச்சிலாகச் சொரிந்து புறங்கையை கொஞ்சம் நக்கிவிட்டார். அம்மாவின் உழவாரப் படையும், உளவுப் படையும் போட்டுக் கொடுத்துவிட போயஸ் தோட்டத்து வளர்ப்புப் பிராணிகளுக்கு வழக்கமாக தரப்படும் ''பரிசுகள்'' கராத்தேவுக்கும் கிடைக்க இருந்தது. வளர்ப்பு மகன் சுதாகரன், உடன்பிறவா சகோதரி நடராஜனின் 'வைப்பு' செரினா போன்றவர்கள் மீது பாய்ந்த 'கஞ்சா' வழக்குகளா? தூத்துக்குடி எம்.எல்.ஏ. ரமேஷ், மதுராந்தகம் ஆறுமுகம், ஆடிட்டர் இராஜகோபால் போன்றவர்களுக்குக் கிடைத்த அடி உதையா? 'கராத்தே' தியாகராஜனுக்கு என்ன ''பரிசு'' என்று இன்னமும் தெரியவில்லை.

அடாவடி கிரிமினல் அரசியல் பொறுக்கித்தனம் என்பதைத் தவிர ஜெயாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் சாதிக்காரர் என்பதற்காகவும் அக்கும்பலால் தேடித் தெரிந்தெடுக்கப்பட்ட கராத்தே தியாகராஜனும் இரகசிய உலக நிழல் பேர்வழிகள், கிரிமினல் மாஃபியா தாதாக்களுடனும் நெருங்கிய தொடர்புடையவர். ஜெயா கும்பலுக்கு எதிராக தானும் நிறைய 'அணுகுண்டு' இரகசியங்கள் வைத்திருப்பதாகவும் தன்னை ஒன்றும் ஆட்டவும் அசைக்கவும் முடியாது என்றும் அவரைப் போலவே சவால் விடுகிறார். தலைமறைவான பிறகு மும்பை மாஃபியா கும்பல்களுடன் நெருங்கிய தொடர்புடையவரும் மும்பை காங்கிரசு தலைவருமான இந்திரா காந்தியின் நிதி மூலாதாரமுமாகிய முரளி தேவ்ராவின் பாதுகாப்பில் தியாகராஜன் ஒளிந்து கொண்டிருந்திருக்கிறார். இப்போதும் மத்திய அமைச்சகத்தின் விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்கிறார். இச்செய்திகள் அறிந்தும் கூட ஜெயா கும்பல் அனுப்பிய உளவுப் படை போலீசால் அவரை நெருங்க முடியவில்லை. அமைச்சர்கள்,


படிப்பகம்

www.padippakam.com

எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள் ஆகிய அனைவரிடமும் விலகல் கடிதம் வாங்கி வைத்துக் கொண்டு கண்ணில் விரல் விட்டு ஆட்டும் ஜெயா கும்பலால் ஒன்றும் செய்யமுடியவில்லை. சட்டப்படியே கூட துணைமேயர் பதவியில் இருந்து எப்படியும் அவரை நீக்குவதற்கு வழியில்லை. போலீசால் தேடப்படும் ஒரு நபர் தமது நகரப் பொறுப்பு மேயராக இருப்பது குறித்து கற்றோர் நிறைந்த சென்னை மாநகரம் பெருமைப்படலாம்! எப்படியாயினும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் போலித்தனத்தையும், கேலிக்கூத்தையும் ஒருசேர வெளிச்சம் போட்டுக் காட்டிய ஜெயா - கராத்தே தியாகராஜன் கும்பலுக்கு நாட்டு மக்கள் நன்றி செலுத்தியேத் தீரவேண்டும்.

• சுப்பு

# "உலக வங்கி உத்தரவுக்கு அடிபணிந்து ரேசன் கடைகளை இழுத்து மூடாதே!"

## — கண்டன ஆர்ப்பாட்டம்

நாடு முழுவதும் ரேசன் கடைகளை நம்பி வாழும் ஏழை மக்கள் புழுத்த அரிசிக்கும் மண்ணெண்ணெய்க்கும் அடிதடியில் - சாலை மறியலில் இறங்கித்தான் தமது ஒதுக்கீட்டைப் பெற வேண்டிய அவலம் தொடர்கிறது. கிராமப்புறங்களில் உள்ள ரேசன் கடைகள் பகுதி நேரமாக இயங்குவதோடு, ஒரு விற்பனையாளருக்கு 5,6 ஊர்களில் உள்ள கடைகளுக்குப் பொறுப்பும் அளிக்கப்பட்டுள்ளன. இதனால் பல ஊர்களில் ரேசன் கடைகள் மூடிக் கிடப்பதும் திடீரென திறக்கப்படுவதும், இதனால் பெரும்பான்மையானோருக்கு அரிசியும் மண்ணெண்ணெயும் கிடைக்காமல் தவிப்பதும் தொடர்கின்றன. புதிய ரேசன் கார்டுகளுக்கு விண்ணப்பம் கொடுத்தும் பலருக்கு இன்னமும் கார்டுகள் கிடைக்கவில்லை. கிடைத்த கார்டுகளிலும் பெயர், முகவரிகளில் தவறுகளும் குழப்பங்களும் நீடிக்கின்றன. ரேசன் கார்டுகளுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படாமல், ஏழைகளின் வயிற்றிலடித்து உணவுப் பொருட்கள் பதுக்கப்பட்டு கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்றன. ஓட்டுக் கட்சி குண்டர்களும் அதிகாரிகளும் லஞ்சத்தில் மஞ்சள் குளிக்கின்றனர்.

"ரேசன் கடைகளை இழுத்து மூடு!" என்று உத்தரவிட்டுள்ளது உலக வங்கி. அதன்படி விசுவாசமாகச் செயல்படும் ஆட்சியாளர்கள், ரேசன் கடைகள் மூலம் விநியோகித்து வந்த 11 வகையான பொருட்களை மூன்றாகக் குறைத்து விட்டனர். உணவு மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளதோடு, வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்கள் என்று சொல்லி பல ஏழைகளுக்கு ரேசன் பொருட்கள் மறுக்கப்படுகின்றன. மறுகாலனியத் தாக்குதல் ஏழைகளின் வயிற்றிலடித்து மரணக் குழியில் தள்ளி வருகிறது.

உலக வங்கி உத்தரவுக்கு அடிபணிந்து ரேசன் கடைகளை இழுத்து மூடும் ஆட்சியாளர்களின் சதிகளை எதிர்த்தும், அனைத்து நியாய விலைக் கடைகளிலும் முறையாக அரிசி, மண்ணெண்ணெய் வழங்கக் கோரியும், ரேசன் கார்டுகளையும் உணவு தானியங்களையும் பதுக்கி கள்ளச் சந்தையில் விற்கும் அதிகாரிகள் - ஓட்டுக் கட்சி குண்டர்களைக் கைது செய்து சிறையிலடைக்கக் கோரியும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக, இப்பகுதியில் இயங்கும் பு.மா.இ.மு; வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து 17.10.05 அன்று எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. தோழர் அம்பேத்கர் (வி.வி.மு.) தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், உழைக்கும் மக்களிடையே புதிய நம்பிக்கையை விதைத்து, போராட அறைகூவுவதாக அமைந்தது.




**தகவல்: புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி; விவசாயிகள் விடுதலை முன்னணி; விழுப்புரம் மாவட்டம்.**

# நம்பிக்கையான தொடக்கம்!

கூலித் தொழிலாளர்களை ஒரு சங்கமாகத் திரட்டுவதென்பது மிகவும் இடர்ப்பாடுகள் நிறைந்த பணி. அப்படியே சங்கமாகத் திரண்டாலும், ஓட்டுப் பொறுக்கி அரசியல் சீரழிவுப் போக்குகளிலிருந்து மீட்டு அரசியல் ரீதியாகவும் அமைப்புக் கட்டுப்பாட்டுடனும் சங்கத்தைக் கட்டி வளர்ப்பதென்பது மிகவும் கடினமான பணி. இத்தகைய பெருஞ்சுமையைத் தோள்களில் தாங்கி, சென்னை - ஆலந்தூர் அரிசி மண்டி சுமை தூக்கும் தொழிலாளர்கள் சங்கமாகத் திரண்டு, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் இணைப்புச் சங்கமாக கடந்த ஓராண்டாகச் செயல்பட்டு வருகின்றனர்.

இச்சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா சங்கத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் ஆலந்தூர் எம்.கே.என்.சாலையில் (மார்க்கெட்) 4.10.05 அன்று மாலை நடைபெற்றது. ஆண்டு விழா என்றாலே ஆட்டம், பாட்டம், சீமைச் சாராய தள்ளாட்டம் என்று இதர பிழைப்புவாத சங்கங்கள் கொண்டாடும் வேளையில், சுமை தூக்கும் தொழிலாளர்கள் வர்க்க உணர்வோடு அரிவாள் - சுத்தியல் சின்னம் பொறித்த சிவப்பு பனியனை உறுப்பினர்களுக்கு வழங்கி தாங்கள் கம்யூனிச இயக்கத்தின் ஓர் அங்கம் என்பதைப் பறைசாற்றினார்கள்.

ஆலந்தூர் வியாபாரிகள் சங்கத் தலைவர்களை முன்னிலைப்படுத்தி நடந்த இந்த ஆண்டுவிழாவில் சங்க முன்னணியாளர்கள் உரையாற்றிய பிறகு, ம.க.இ.க. மையக் கலைக் குழுவினர் நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சி நூற்றுக்கணக்கான மக்களை ஈர்த்து போராட்ட உணர்வூட்டியது. முன்னுதாரணமாக நடந்த இந்த ஆண்டுவிழா நிகழ்ச்சியால் உணர்வு பெற்ற இதர அமைப்புசாரா தொழிலாளர்களும் சங்கத்தில் இணைய ஆர்வத்துடன் முன்வந்திருப்பது, இவ்விழாவின் வெற்றியைப் பறைசாற்றுகிறது.

**- புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.**

www.padippakam.com

# வாசகர் கடிதம்

● நாலுவழிச் சாலை மக்களுக்கான நல்வழிச் சாலை அல்ல. இச்சாலைகளை உபயோகிக்க கூடுதல் கட்டணம் செலுத்தத் தயாராக உள்ள நடுத்தர வர்க்கம், இந்த உலகமயமாக்கம் தன்னையும் தகர்த்துக் கீழே தள்ளும் என்பதை உணரும்போது மட்டுமே, இப்பொருளாதார வளர்ச்சி யாருக்கானது என்பதைப் புரிந்து கொள்ளும். அல்லாதவரை "நாடு, மக்கள்" எனக் குறிப்பிடும்போது தம்மை மட்டுமே முன்னிறுத்தும் இந்த வகையினர், கட்டுரை உணர்த்தும் பொருளைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். எனவே, முழுமையான உள்விவரங்களுடன் கட்டுரை எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**- ஜீவா, சென்னை.**

● வேற்று கிரகத்தில் இருந்து பூமிக்கு அழிவு வந்தால் அதிலிருந்து மனித குலத்தைக் காக்கப் போராடுவதாகத் திரைப்படம் எடுக்கும் அமெரிக்கா, கத்ரீனா புயல் தாக்கிய போது சொந்த நாட்டு மக்களையே காப்பாற்ற முன்வரவில்லை. அமெரிக்க மாயையைக் கலைத்த கட்டுரை சிறப்பு. நால்வழிச் சாலைகள், கணினி மென்பொருள் பூங்காக்களால் நாடு முன்னேறுவதாகக் கருதுவோரின் கனவைக் கலைத்த, "ஒட்டுண்ணித்தனத்தின் புதிய பரிமாணம்" என்ற கட்டுரை அருமை.

**- வாசகர் வட்டம், தஞ்சை.**

● மத்தூர் - சிறு சந்தை நகரம். இங்கு புதிய ஜனநாயகம் இதழ் நூறுக்கும் மேல் விற்பனையாகிறது. இதைப் பார்த்து, வங்கி ஊழியர்கள் சிலர், இவ்வளவு பத்திரிகை இங்கு விற்பனையாகிறதா என்று ஆச்சரியமாகக் கேட்டு, தாங்களும் பு.ஜ. இதழை வாங்கிப் படித்து பாராட்டினர். ஒவ்வொரு இதழும் கூர்மையான அரசியலோடு வெளிவருவது எங்களுக்கு உற்சாகமளிக்கிறது.

**- இராணி, போச்சம்பள்ளி.**

● அக். இதழின் அட்டைப்படம் போராட்ட உணர்வைத் தூண்டும் வண்ணம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா பணக்கார நாடு, மக்கள் சுகபோகமாக இருப்பார்கள் என்ற மாயையைத் தகர்த்து, அங்கு ஏழைகள் படும் அவலத்தையும் அரசின் அலட்சியத்தையும் கத்ரீனா புயல் பற்றிய கட்டுரை எடுப்பாக விளக்கியது. நாலுவழிச் சாலையால் நாடு முன்னேறப் போவதாக நம்பிய எங்களது தவறான கருத்தைக் களையும் விதமாக நாலுவழிச் சாலை பற்றிய கட்டுரை அமைந்துள்ளது. சாதிவெறியர்களின் கொட்டத்தை ஒடுக்க அவர்களது இடஒதுக்கீடு உரிமை, வாக்குரிமை உள்ளிட்டு அனைத்து உரிமைகளையும் பறிக்க வேண்டும் என்று பு.ஜ. வைத்துள்ள தீர்வு மிகச்சரியானது; நியாயமானது.

**- வாசகர்கள், பாடாலூர்.**

● செப். 12 அன்று நடந்த கோக் எதிர்ப்புப் போராட்டத்தில் உங்களது புதிய ஜனநாயகப் புரட்சிகர அமைப்புகளின் வீரியத்தையும் எழுச்சியையும் காண முடிந்தது. முற்போக்கு, ஜனநாயக, தமிழின அமைப்புகள் அனைத்தும் உங்களோடு ஒன்றிணைந்து முழுமூச்சில் அமெரிக்க எதிர்ப்பில் ஈடுபட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**- மலர், திருச்சி.**

● ஈரானுக்கு எதிராக அமெரிக்காவுக்குச் சேவை செய்யும் இந்திய ஆட்சியாளர்களின் துரோகத்தனத்தை தலையங்கம் எடுப்பாக விளக்கியது. புரட்சி பேசும் சி.பி.எம். தலைவர்களின் பித்தலாட்டச் செயலுக்கு புத்ததேவ் பட்டாச்சார்யா எடுப்பான சான்று. கோக் எதிர்ப்புப் போராட்டச் செய்திகள் உணர்வூட்டுபவையாக அமைந்துள்ளன.

**- செம்மலர் மா. நடராசன், அறந்தாங்கி.**

● தந்தை பெரியார் எதிர்பார்த்த போர்க்குணம் மிகுந்த இலட்சியப் பயணத்தை புதிய ஜனநாயகப் புரட்சிகர அமைப்புகள் மட்டுமே நடத்தி வருகின்றன. எந்தவொரு ஓட்டு அரசியல் கட்சியும் செய்யத் துணியாத பிரச்சாரத்தை, போராட்டத்தை கோக் எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் சாதித்துள்ளன. நெல்லை ஆர்ப்பாட்டத்தில் பெண் தோழர்களின் உணர்ச்சிகரமான அந்தப் பறையொலியானது, அமெரிக்கக் கொள்ளையர்களின் தலையில் இடியாய் இறங்கப் போவது நிச்சயம்.

**- இராசா இராவணன், பழனி.**

● காந்தி-காங்கிரசு துரோகங்களின் களர் நிலத்தில் விளைந்த பதரான மன்மோகன் சிங்கின் கழுத்தறுப்பு ஒருபுறம். காங்கிரசு கயவாளிகளை முட்டுக் கொடுத்து ஆதரிக்கும் போலி கம்யூனிஸ்டுகள் மறுபுறம். இவை மதச் சார்பற்ற அரசியல் நாணயத்தின் இரு பக்கங்கள். இதைச் சுண்டி விளையாடுகிறது மறுகாலனியாக்கம். காங்கிரசுக்கும் போலி கம்யூனிஸ்டுகளுக்கும் கொடிகள்தான் வேறுபாடு; கொள்கை ஒன்றுதான் என்பதை பு.ஜ. கட்டுரைகள் உணர்த்துகின்றன.

**- கதிரவன், சென்னை.**

● தன் சொந்த நாட்டு மக்களையே காப்பாற்ற வக்கற்று நிற்கும் அமெரிக்க வல்லரசு, இதர ஏழை நாடுகளுக்கு நிவாரணப் பொருட்களைக் கப்பலில் அனுப்புவதும், ஏன் ஜனநாயகத்தையே ஏற்றுமதி செய்து அந்நாடுகளை ஆக்கிரமிப்பதும் எதற்காக? இந்தக் கேள்வியின் மூலம் அமெரிக்க மாயையைக் கலைத்து, அதன் கோர முகத்தை கத்ரீனா பற்றிய கட்டுரை அம்பலப்படுத்திக் காட்டியது.

**- நிர்மலா, திருச்சி.**

● கிராமப்புற சாலைகள் போட நிதியில்லை என்று கையை விரிக்கும் ஆட்சியாளர்கள், தங்க நாற்கரண நெடுஞ்சாலைகள் - நாலுவழிச் சாலைகளுக்கு கோடி கோடியாய் வாரியிறைப்பது ஏன் என்பதை ஒட்டுண்ணித்தனத்தின் புதிய பரிமாணம் கட்டுரை தெளிவுபடுத்தியது. அமெரிக்கா சொர்க்கபுரி அல்ல; ஏழைகளும் பணக்காரர்களும் கொண்ட வர்க்க முரண்பாடு நிலவும் நாடு என்பதையும், அமெரிக்க ஆட்சியாளர்களின் கொடூர முகத்தையும் கத்ரீனா பற்றிய கட்டுரை படம் பிடித்துக் காட்டியது. மார்க்சிய - லெனினிய இயக்கத்தில், பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்துள்ள புதிய ஜனநாயகத்துக்கு எமது புரட்சிகர வாழ்த்துக்கள்!

**- வாசகர் வட்டம், திருச்சி**





*இப்போது விற்பனையில்...*

**தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தால்**

**வளர்ச்சியா வீழ்ச்சியா?**

**- இந்தியப் பொருளாதாரத்தின் உண்மை நிலை**

பொருளாதாரத்தை அலசிப் பார்த்தால் வளர்ச்சியின் வரைபடக்கோடு யாருக்கானது என்று புரியும். வீழ்ச்சியின் ரேகைகள் உழைக்கும் மக்களின் உள்ளங்கையில் ஓடுவது தெரியும். இருண்ட இந்தியாவின் உண்மை நிலையை புள்ளி விவர ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டும் நூல்.

*பு.ஜ.தொ.மு. வெளியீடு* *நன்கொடை: ரூ. 60/-*

**நூல் கிடைக்குமிடம்:**

**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,**
110, இரண்டாம் தளம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. ✆: 98411 61822

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.
✆: 044 - 28412367



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

உரிமையைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள். வேலைக்குச் செல்ல விரும்புவோரைத் தடுக்காதீர்கள்'' என்று உபதேசம் செய்தார்.

சி.பி.எம். கட்சியின் மே.வங்க மாநிலச் செயலாளரான அனில் பிஸ்வாஸ், ''தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது, வேலைக்குச் செல்ல விரும்புவோரைத் தடுக்கக் கூடாது. தனியார் வாகனங்களை மறித்து நிறுத்தக் கூடாது. முதல்வரின் துணைவியார் காரை வழிமறித்து தடுத்தவர்களைக் கண்டுபிடித்து எச்சரித்துள்ளோம்'' என்று சீறுகிறார்.

தொழிலாளர்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் அதிர்ச்சியளிக்கும் இந்த துரோகத்தைப் பற்றி புத்ததேவ் என்ன சொல்கிறார்? ''மே.வங்கத்தைப் பற்றிய தவறான சித்திரத்தை மாற்றி, இது தொழில் அமைதி நிலவும் மாநிலம் என்று நிரூபித்துக் காட்டி, அன்னிய முதலீடுகளை சிரமப்பட்டு கொண்டு வந்துள்ளேன். இந்நிலையில், தொழிலாளர் போராட்டங்கள் தீவிரமானால், அன்னிய முதலீட்டாளர்களுக்குத் தவறான கருத்துதான் ஏற்படும். எனவேதான் நானும் எனது அமைச்சர்களும் வேலை நிறுத்தம் நடந்த போதிலும் வேலைக்குச் சென்றோம். வேலைக்குச் செல்ல விரும்புவோரைத் தடுக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டோம். மற்றபடி இந்த ''பந்த்''-ஐ நான் எதிர்க்கவில்லை; நிராகரிக்கவுமில்லை'' என்று வாக்குமூலம் அளித்து பகிரங்கமாகவே தனது ஏகாதிபத்திய கைக்கூலித்தனத்துக்கு நியாயவாதம் புரிகிறார்.

புத்ததேவின் துரோகத்தனம் இதோடு நின்று விடவில்லை. தகவல் - தொழில்நுட்பத் துறைக்கு சிறப்புத் தகுதியளித்து, அத்துறைகளில் வேலை நிறுத்தமே கூடாது என்று உத்தரவிட்டுள்ளார் புத்ததேவ். பொது வேலை நிறுத்தத்தின் போது, இத்துறையின் பல நிறுவனங்களை கட்டாயமாக மூட வைத்ததும், வேலைக்குச் சென்ற இத்துறையின் ஊழியர்களைத் தடுத்ததும் தவறான - அராஜகமான செயல் என்று தனது சி.ஐ.டி.யு. சங்கத்தினரையே எச்சரித்துள்ளார்.

புத்ததேவின் துரோகத்தனத்தைக் கண்டு பொருமும் சி.ஐ.டி.யு. செயலாளரான எம்.கே. பாண்டே, ''வேலை நிறுத்தத்தின் போது வேலைக்குச் செல்லும் ஊழியர்களைத் தடுப்பது தவறான செயல் அல்ல; தகவல் - தொழில்நுட்பத் துறைக்கு சிறப்புத் தகுதி அளிப்பது தான் தவறானது. டாடா கன்சல்டன்சி, காக்னிசன்ட் டெக்னாலஜி, ப்ரைஸ் வாட்டர் ஹவுஸ் முதலான நிறுவனங்கள் இல்லாமல் போனால் ஒன்றும் குடி முழுகி விடாது. இவை ஒன்றும் அத்தியாவசியப் பணித்துறைகள் அல்ல. இந்நிறுவனங்களில் படித்த இளைஞர்கள் எந்த உரிமையுமின்றி கொத்தடிமைகளாக 12 மணிநேரம் கடுமையாக வேலை வாங்கப்பட்டுச் சுரண்டப்படுகிறார்கள். வேலை உத்தரவாதமின்றிப் பழிவாங்கப்படுகிறார்கள். இத்தகைய நிறுவனங்களுக்கு சிறப்புச் சலுகையும் தகுதியும் அளிப்பது தவறானது'' என்கிறார்.

மே.வங்க தகவல் - தொழில்நுட்பத் துறை அமைச்சரான மனாப் முகர்ஜி, ''இத்துறையில் கால் பதித்துள்ள இந்திய - அந்நிய நிறுவனங்கள் மாநிலத்தின் வளர்ச்சிக்கு முதன்மையானவை. எனவேதான் எவ்விதத் தடையுமின்றி எல்லா நாட்களும் இயங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இத்துறையில் சுரண்டலோ, உரிமை பறிப்போ இல்லை'' என்று ஒரே போடாகப் போடுகிறார்.

''தகவல் - தொழில்நுட்பத் துறை என்பது அத்தியாவசியத் துறை அல்ல. மாநில தொழிலாளர் துறையும் அவ்வாறு வரையறுக்கவில்லை. அவ்வாறிருக்க மாநில அரசு தகவல் - தொழில்நுட்பத் துறைக்கு சிறப்புத் தகுதி அளிப்பதும், வேலை நிறுத்தமே கூடாது என்பதும் சட்ட விரோதமானது'' என்று சாடுகிறார், மே.வங்க சி.ஐ.டி.யு. செயலாளரான காளிகோஷ்.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த புத்ததேவ், ''இன்றைய உலகமயமாக்க சூழலில் தொழிற்சங்கங்கள் சுயகட்டுப்பாடுடன் செயல்பட வேண்டும். நீங்கள் எல்லை மீறுவது சரியல்ல. தகவல் - தொழில்நுட்பத் துறையில் வேலை நிறுத்தங்களே கூடாது. இதுபற்றி கட்சியின் மத்தியக் கமிட்டியில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப் போகிறேன்'' என்று 'அருள்' வந்து இறங்கியவர் போல சாமியாடுகிறார்.

தொழிற்சங்க உரிமைகளைப் பறித்து தொழிலாளர்களின் முதுகில் குத்தும் மே.வங்க 'இடதுசாரி' அரசின் துரோகத்தனத்தைக் கண்டு குமுறும் சி.ஐ.டி.யு. சங்கத்தினர், இத்துரோகக் கும்பலை எதிர்த்துப் போராடுவார்களா, அல்லது கட்சியின் கட்டுப்பாடு என்ற பெயரில் சமரசமாகிப் போவார்களா என்று தெரியவில்லை. ஆனால், ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கச் சூழலில், போலி கம்யூனிஸ்டுகளின் 'இடதுசாரி' அரசானது தொழிலாளர் விரோத துரோக அரசாகவே இருக்கும். மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற மாய்மாலங்களால் அது உழைக்கும் மக்களை ஒடுக்கவே செய்யும் என்ற உண்மையை மே.வங்கம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

● குமார்

## கழுதை தேய்ந்து கட்டெறும்பானது

**ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் கையை முறுக்கி இடதுசாரிகள் காரியம் சாதித்துக் கொள்கிறார்கள் என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் எச்சரித்து பூச்சாண்டி காட்டுகின்றன. ஆனால், 'இடதுசாரிகள்' என்று மார்தட்டிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகளோ, காங்கிரசு கூட்டணி அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்ப்பதாக நாடகமாடிக் கொண்டு நடைமுறையில் அதற்குப் பக்கமேளம் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**''பொதுத்துறையைப் பாதுகாப்போம்'' என்று முழங்கி வந்த சி.பி.எம். கட்சி, இப்போது நவரத்தினங்கள் எனப்படும் 9 பெரும் அரசுத்துறை நிறுவனங்களை மட்டும் பாதுகாப்போம்; மற்ற அரசுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பதைத் தடுக்க மாட்டோம்!'' என்று காங்கிரசு கூட்டணி அரசின் ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்குப் பிறகு கமுக்கமாக முழக்கமிட ஆரம்பித்துவிட்டது.**

**சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளரான பிரகாஷ் கரத், ''நலிவடைந்த, நட்டமேற்படுத்துகிற அரசுத்துறை நிறுவனங்களை மூடிவிட்டு அதன் பங்குகளைத் தனியாருக்கு விற்று விடலாம்'' என்று இப்போது உபதேசம் செய்கிறார்.**

**நவரத்தினங்கள் எனப்படும் 9 மிகப் பெரிய நிறுவனங்கள் உள்ளிட்டு ஏறத்தாழ 240 அரசுத்துறை நிறுவனங்கள் நாட்டில் இயங்கி வருகின்றன. இவற்றில் ஏறத்தாழ 88 நிறுவனங்கள் மட்டுமே தற்காலிகமாக நட்டத்தில் இயங்குகின்றன. இவற்றை நட்டக்கணக்கு காட்டி தனியாருக்கு விற்பதில் தவறேதுமில்லை; இந்நிறுவனங்களில் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டாலும் பரவாயில்லை என்கிறார் திருவாளர் கரத்.**

**தனியார்மயத்தை எதிர்க்கும் சி.பி.எம்.இன் 'புரட்சி' எப்படியிருக்கிறது, பாருங்கள்.**

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 1 10, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05

# அன்று கொன்றது சுனாமி! நின்று கொல்கிறது அரசு!

கடந்த ஆண்டு தமிழகத்தைத் தாக்கிய ஆழிப்பேரலையையும், அதனால் தமிழக மீனவ மக்களின் வாழ்க்கை நிர்மூலமாக்கப்பட்டதையும் நாம் கனவிலும் மறந்துவிட முடியாது. அதுபோல பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ''உதவிகள்'' அறிவிப்பதில், ஜெயா - கருணாநிதி கும்பல்களிடையே சக்களத்தி சண்டை நடந்ததையும் நாம் மறந்துவிட முடியாது. உதவிகள் பற்றி, மைய அரசிற்கும், மாநில அரசிற்கும் இடையே நடந்த அறிக்கைப் போர், ''மீனவர்களுக்கு அடிச்சுச்சடா யோகம்'' என்று எண்ணும்படியான தோற்றத்தை உருவாக்கியது. ஆனால், பாதிக்கப்பட்ட மீனவர்கள் கடந்த பத்து மாதக் காலமாக அகதிகளைப் போல அவல வாழ்க்கை வாழ்வது உங்களுக்குத் தெரியுமா?

சென்னையில் சமீபத்தில் பெய்த மழையால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருந்த கார்கில் நகர் வெள்ளக்காடாக மாறியதால், மீனவர்கள் மூட்டை முடிச்சுகளோடு தெருவுக்கு வர வேண்டியதாகி விட்டது. தென் சென்னை பகுதியில் துரைப்பாக்கம் கிராமத்தில் கண்ணகி நகரில் தங்க வைக்கப்பட்டிருந்த மீனவர்களின் கதியும் இப்படிதான் ஆகிவிட்டது. கொஞ்சம் பலத்த மழை பெய்தாலே தாங்காத இந்த தற்காலிக குடியிருப்புகளில், பருவமழை தொடங்கி விட்ட பிறகு எப்படி வாழ முடியும்? இனி, இரண்டு மாதங்களுக்கு, இந்த மீனவர்கள் நடைபாதைகளில் ''டெண்ட்'' அடித்துக் கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை. அரசின் சுனாமி நிவாரணப் பணிகள் எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதற்கு இது வொரு சிறிய உதாரணம்தான்.

''தமிழக அரசு மீனவர்களுக்கு 1,30,000 நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுப்பதாக கூறியது. ஆனால், இது வரை 34,000 வீடுகள் கட்டுவதற்குத் தான் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட 182 கிராமங்களில் உருப்படியாக எந்த நிவாரணப் பணியும் நடைபெறவில்லை. வீடுகள் கட்டப்பட்டு வரும் 37 இடங்களில், அது பற்றி யாரும் எந்தக் கேள்வியும் கேட்க முடியாது என்ற சிவப்புநாடாத்தனம் கோலோச்சுகிறது. அதாவது, மீனவர்களின் பெயரைச் சொல்லி, அதிகாரவர்க்கம் - காண்டிராக்டர்கள் கும்பல் ஆட்டம் போடுகிறது'' எனச் சில தன்னார்வக் குழுக்கள் இணைந்து, நிவாரணப் பணிகள் பற்றிய அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதே இப்படி கிடப்பில் கிடந்தால், அவர்கள் மீண்டும் தொழிலுக்குப் போவதற்கு என்ன உதவி கிடைத்திருக்கும்? அரசு இப்படி அலட்சியமாக நடந்து வருவதைப் பார்த்தால், மைய அரசும், மாநில அரசும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக ஒதுக்கிய நிதி, நன்கொடையாக வசூலித்த கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்க கஜானாவில் தான் இருக்கிறதா, அல்லது அதிகாரிகள், அரசியல்வாதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகளின் பைகளுக்குள் போய் விட்டதா என்ற கேள்வி எழுந்து விடுகிறது.

உழைக்கும் மக்களின் வாழ்க்கையை நாசப்படுத்தும் ஒவ்வொரு துயரத்திலும், ஆதாயம் தேடிக் கொள்வது தான் முதலாளித்துவவாதிகளின் வாடிக்கை. எரிகிற வீட்டில் பிடுங்கும் அவர்களின் இந்த வேட்டையில் இருந்து சுனாமி நிவாரணம் மட்டும் தப்பி விடுமா?



தென்சென்னை - கண்ணகி நகரில் தற்காலிக வீடு என்ற பெயரில் கட்டிக் கொடுக்கப்பட்ட தகரக் கொட்டகைகள் மழை - வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கி விட்டதால், மூட்டை முடிச்சுகளோடு வெளியேறும் மீனவர்கள்.

வடசென்னையில் மீனவர்கள் தங்கியிருந்த கார்கில் நகர் வெள்ளக்காடாக மாறியதால், உரிய நிவாரணம் கேட்டு நடந்த சாலை மறியல்.



படிப்பகம்